# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

MATHANILA මාතනිලා

நிலா - 20 Regd No: 1419 01 ஜூன் 2014





அறிவு! ஆனந்தம்!! ஆச்சரியம்!!!

# KshaKi

## Online Icing
## Home Delivery Service









- விரைவானதும் துரிதமானதும்
- வீட்டில் இருந்தபடியே ஓடர் பண்ணலாம்
- உரியவரின் பிறந்த தினத்தன்று கிடைக்கச் செய்வதோடு அவர்களது பிறந்த தினத்தை வியப்பூட்டும் நிகழ்வாக மாற்றலாம்
- பிறந்த தினத்தை கொண்டாடும் நபரை குதுகளிக்கச் செய்யுங்கள்
- நாட்டில் எப்பகுதியில் இருந்தும் ஓடர் செய்யலாம்
- எமது சேவையில் உங்கள் ஓடருக்கான பரிசுப்பொருட்கள் கேக், பழக்கூடை போன்றனவும் மேலதிகமான பரிசுப் பொருட்களையும்  இணைத்துக் கொள்ளலாம்

**Home Delivery**




**ஓடர் செய்யும் விதம்**
**தொடர்பு கொள்பவர்கள் உங்களது பெயர், தொ.பேசி இலக்கம், முகவரி என்பற்றை கொடுத்துதவவும்**



குறிப்பு: ஐசிங் வகுப்புக்கள் மற்றும் Beauty & Hair care வகுப்புக்கள் என்பன நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழுங்கப்படும்



தொடர்புகளுக்கு:
பூந்தோட்டம், வவுனியா.
077 2661545 / 024 5682130
facebook -kshakionlineicing service

விலை: 60/-



# இம்மாத நாயகன்



| | |
|---|---|
| பெயர் | சேகுவேரா |
| பிறப்பு | எர்னெஸ்டோ குவேரா<br>ஜூன் 14, 1928<br>ஆர்ஜெந்தீனா |
| இறப்பு | அக்டோபர் 9,1967 (அகவை 39)<br>(மரண தண்டனை)<br>பொலிவியா |
| நினைவிடம் | சே குவேரா கல்லறை<br>கியூபா |
| பணி | மருத்தவர், எழுத்தாளர், போராளி, அரச அலுவலர் |
| அமைப்பு(கள்) | சூலை 26 இயக்கம், கியூப சோசலிச புரட்சியின் ஐக்கிய கட்சி, பொலிவிய தேசிய விடுதலைப்படை |
| சமயம் | இல்லை (மாக்சிய மனிதநேயம்) |
| பெற்றோர் | எர்னெஸ்டோ குவேரா லின்ச் |
| வாழ்க்கைத் துணை | கில்டா (1955 - 1959)<br>அலேய்டா மார்ச் (1959 - 1967, (மரணம் வரை) |
| பிள்ளைகள் | கில்டா (1956 - 1995),<br>அலேய்டா (பி. 1960),<br>கமிலோ (பி. 1962),<br>செலியா (பி. 1963),<br>எர்னெஸ்டோ (பி. 1965) |
| கருத்து | வியர்வை சிந்தாத உன்னாலும்<br>மைசிந்தாத பேனாவாலும்<br>எதையும் சாதிக்க முடியாது |
| கையொப்பம் |  |


மாதநிலா
MATHANILA மாதநிலா உங்கள் குடும்ப நிலா!

இதழாசிரியர்
திருமதி.அனிதா விஜய்

நிர்வாக இயக்குனர்
திரு.எஸ்.விஜய்

கணினி வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு
விஜய் அச்சுப் பதிப்பகம்
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

வெளியீடு
பதிப்புநிலம் வெளியீட்டகம்
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

அனைத்து ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
"மாதநிலா"
172B, மில் வீதி, வவுனியா.



எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்

### ஆன்மீகத் துறவி

# விவேகானந்தர்



"ஒருவன் சில பரீட்சைகளில் தேர்வு பெற்று, சொற்பொழிவு செய்யும் திறன் உள்ளவனாக இருந்தால்தான், அம்மனிதனைப் படித்தவன் என்று கருதுவீர்களா? வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் தகுதியைப் பெறுவதில் பாமர மக்களுக்கு உதவி புரியாத கல்வியை, அவர்களது குணநலன்களைக் கட்டி வளர்க்காத கல்வியை, அதே போல் அம்மக்களிடம் ஈகைக் குணத்தையும், சிங்கத்திற்குள்ளது போன்ற தைரியத்தையும் ஊட்டி வளர்க்காத கல்வியை, கல்வி என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறதா? எவனொருவன் தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக் கொள்ளத் திறன் உடையவனோ, அவனே உண்மையான கல்வியை அடைந்தவனாவான்."

இப்படி ஒரு காவியுடை அணிந்த ஒரு சாமியார் சொன்னார் என்றால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் உண்மையில் இதைவிட வேகமான, விவேகமான கருத்துக்களைச் சொல்லிச் சென்றிருக்கிறார் விவேகானந்தர்.

'செங்காவிச் சிங்கம்' என்று சொல்லும் அளவுக்கு விவேகானந்தரின் சிந்தனைகள் கொட்டிக் கிடக்கின்றன.

இந்து மத மேன்மை, இந்தியாவின் வலிமை, மூடத்தனத்தின் ஒழிப்பு, பகுத்தறிவின் தேவை, மெய்யான கல்வியாளர்கள், ஏழைகளின் நிலைமை என பல்வேறு பொருள்கள் பற்றி விவேகானந்தர் கூறிய கருத்துகள் மனித குல வளர்ச்சிக்கு மாமருந்தாகும்.

விசுவநாதர் புவனேஸ்வரி தம்பதிக்கு 1863 ஜனவரி 12 அன்று பிறந்த விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாதர்.

சிறு வயதிலிருந்தே எது பற்றியும் ஆய்ந்து அறிகின்ற போக்கு நரேந்திர நாதருக்கு இருந்தது. ராமகிருஷ்ணரின் சீடராகச் சேர்ந்தார் நரேந்திரர். மற்ற சீடர்களிலிருந்து வேறுபட்டு விவேகமிக்கவராக நரேந்திரன் திகழ்ந்தார். அதனால் நரேந்திர நாதருக்கு 'விவேகானந்தர்' என்று ராமகிருஷ்ணர் பெயர் சூட்டினார். இந்தப் பெயரே நிலை பெற்றுவிட்டது.

1885 ஆம் ஆண்டு ராமகிருஷ்ணர் மறைந்ததும், விவேகானந்தர் யாத்திரையை மேற்கொண்டார். காசி, லக்னோ, ஆக்ரா, பிருந்தாவனம், ஹத்ராஸ், ரிஷிகேஷ், பிரானாகேகார் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

மற்றொரு முறை விவேகானந்தர் யாத்திரை புறப்பட்ட போது ராமேஸ்வரத்திற்கு வந்தார். இந்த யாத்திரைதான் விவேகானந்தரின் அறிவாற்றலை வெளிப்படுத்துவதற்கும், உலக மேதைகள்

(தொடரும்...)

# தூக்கம் கெடுவதால் கணித, விஞ்ஞான திறன் குறையும்! ஆய்வில் பரபரப்புத் தகவல்


பள்ளிப் பிள்ளைகளின் கற்கும் திறனில், அவர்களது தூக்கமின்மை அல்லது தூக்கம் கெட்டுப் போதல் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அண்மைய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டிருக்கிறது.

சர்வதேச கல்விப் பரீட்சைகளை நடத்தும் ஆய்வாளர்கள் இதனைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மிகவும் முன்னேறிய நாடுகளில், குறிப்பாக கணினி மற்றும் தொலைக்காட்சிகளை நீண்ட நேரம் பார்ப்பவர்களுக்கு இந்த தூக்கம் கெட்டுப் போவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும், அத்தகைய நாடுகளில் உள்ள பள்ளிப் பிள்ளைகளின் கணித, விஞ்ஞான மற்றும் வாசிப்பு திறன் குறைவாக இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

பொஸ்டன் கல்லூரியால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் அமெரிக்காவிலேயே அதிகமான குழந்தைகள் தூக்கம் கெட்டுப் போவதற்கான வாய்ப்பு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அங்கு 9 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளில் 73 வீதத்தினருக்கு ஒழுங்கான தூக்கம் கிடையாது என்றும், 13 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளில் 40 வீதத்தினருக்கு தூக்கம் சரியாக இல்லை என்றும் கூறப்படுகிறது. உலக சராசரியைவிட இது மிகவும் அதிகமாகும். இதேபோன்று நியூசிலாந்து, சவுதி அரேபியா, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளிலும் இந்தப் பிரச்சினை அதிகமாக உள்ளது.



நல்ல தூக்கம் இருப்பதால், கணிதம், விஞ்ஞானத்தில் அதிக பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களை கொண்ட நாடுகளாக அஜர்பைஜான், கசகஸ்தான், செக் குடியரசு, ஜப்பான் மற்றும் மோல்ட்டா ஆகிய நாடுகள் திகழுகின்றன.

ஆசிய மாணவர்கள் இந்த கணித, விஞ்ஞான மற்றும் வாசிப்பு திறனில் முன்னணியில் திகழ்கின்றனர்.


"மாதநிலா" சஞ்சிகையில்
க.பொ.த.சாதாரண தர பரீட்சையில்
6 பாடச் சித்தியுடன்

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்


ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்


தொடர்புகளுக்கு:
077 0498177


சரியான நித்திரை இல்லாத பிள்ளைகள் ஆசிரியர்களின் உத்தரவுகளை கடைப்பிடிப்பதிலும் சோர்வு காண்பிப்பதாகக் கூறப்படுகின்றது.

தூக்கம் குறைவான நிலைமையில் மூளை புதிய விசயங்களை உள்வாங்க தடுமாறுவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

கணினியில் விழித்திருத்தல், நண்பர்களுக்கு அதிகமாக மெசேஜ்களை அனுப்புவர்கள் ஆகியோர் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.






# மாயமாய் மறைந்த மலேசிய விமானம்:
# மந்திரவாதியும், பேர்முடா முக்கோணப்புதிரும்

14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பேரண்டம் ஒரு புள்ளியாக இருந்தது. இருப்பவை அனைத்தும் அந்த ஒற்றைப் புள்ளியில் திணிந்திருந்தன.

ஒரு பெருவெடிப்பில் அந்தப் புள்ளி விரிந்து உருவானதுதான், இன்று நாம் வாழும் வெளி–கால அரங்கம்.

பிரபஞ்சத்தின் புதிர்கள் ஏராளம். ஏன், இந்தப் பிரபஞ்சமே ஒரு புதிர்தான். அதன் முடிச்சுகளை அவிழ்க்கத் தொடங்கிவிட்டான் மனிதன் என்பதன் அடையாளம்தான் இந்தப் பெருவெடிப்புக் கொள்கை. உண்மையில், பிரபஞ்சப் புதிரின் முடிச்சுகளை அவிழக்கத் தொடங்கிவிட்டானா மனிதன்? ஆம் என்கிறார்கள் அறிவியலாளர்கள். பெருவெடிப்பு விட்டுச் சென்ற சுவடுகளைக் கண்டுபிடித்திருக்கிறது ஒரு வானியல் தொலைநோக்கி. பெருவெடிப்பு நிகழ்ந்தவுடன் பேரண்டம் உப்பிப் பெருத்ததை உறுதி செய்கிறது, அந்தச் சுவடுகள். பேரண்டம் ஏன் தொடர்ந்து விரிவடைந்து செல்கிறது என்பதை பெருவெடிப்புக் கொள்கை விளக்குகிறது என்றால், நோக்கியறியத்தக்க பேரண்டம் முழுமையும் ஏன் எத்திசையிலும் ஒரே சீராக இருக்கிறது என்பதை விளக்குகிறது, உப்பல் கொள்கை.

14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் பேரண்டம் பிறந்ததால் உருவான பிரசவக் கோடுகளை அறிவியலால் கண்டறிய முடிந்திருக்கிறது.

ஆனால், 239 உயிர்களுடன் திடீரென மறைந்த ஒரு அலுமினியப் பறவையின் சுவடுகளைக் கண்டறிவதற்குள் திக்கித் திணறுகிறது தொழில்நுட்பம்...

எத்தகைய முரண்மை இது...?

எத்தனையோ முரண்சுவைகளில் இதுவும் ஒன்று என கடந்து செல்ல முடியாமல் தடுக்கிறது. 239 மனித உயிர்களின் கதி... அதிலிருந்து விளையும் அவலம்தான், மந்திரவாதியிலிருந்து பெர்முடா முக்கோணப் புதிர் வரை அடைக்கலம் தேடி அனைவரையும் அலைக்கழிக்கிறது...

**உண்மைக் கதை....!**

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து, மார்ச் 8ஆம் தேதி, 239 பேருடன் (227 பயணிகள்,12 விமான ஊழியர்கள் நள்ளிரவுக்குப் பிறகு 12.41 மணிக்குப் புறப்பட்டது, எம்எச் 370 எனும் பெயர்கொண்ட, போயிங்-777 ரக விமானம். பயணிகளில் மூன்றில் இரு பங்குக்கும் அதிகமானோர், 154 பேர் சீனர்கள். 5 இந்த யர்களும் இருந்தனர். சென்னையைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இருந்தார். அந்த விமானம் அன்று காலை 6.30 மணிக்கு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் தரையிறங்கியிருக்க வேண்டும். ஆனால் 1.40 மணிக்கு விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. ராடார் கருவியின் கண்காணிப்பில் இருந்தும் விமானம் மறைந்துவிட்டது. 35 ஆயிரம் அடி உயரத்தில் வியத்நாம் வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தபோது இது நடந்துள்ளது. உடனடியாக விமானம் விபத்துக்குள்ளாகி வியட்நாம் அருகே தென்சீனக் கடலில் விழுந்துவிட்டதாகவும், பயணிகள் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பில்லை எனவும், மீட்புப்

பணிகள் நடைபெற்று வருவதாகவும் ஊடகங்கள் அலறின. ஆனால் அடுத்தடுத்து வந்த செய்திகள், அது வழக்கமானதொரு, துயரார்ந்த விமான விபத்து என்ற எண்ணத்திற்கு முடிவு கட்டும் வகையிலேயே அமைந்தன.

தென்சீனக் கடலில் விமானத்தின் சிதைந்த பாகங்கள் கிடைக்கவில்லை. அதன் பிறகு, மலேசியக் கடற்படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி, மலாக்கா நீரிணைப் பகுதியில் விமானம் விழுந்துகிடப்பதாகக் கூறப்பட்டது. மலாக்கா நீரிணை என்பது விமானம் சென்ற பாதைக்கு எதிர்த்திசையில் அமைந்துள்ளது. எனவே விமானம் செல்ல வேண்டிய பாதையிலிருந்து திருப்பப்பட்டு மலாக்கா நீரிணைக்குச் சென்றது ஏன் என்ற கேள்வி எழுந்தது. அங்கும் விமானம் கிடைக்கவில்லை என்றவுடன், அப்படியே மேற்குநோக்கி நகர்ந்து அந்தமான் கடலில் விழுந்திருக்கிறதா எனத் தேடத் தொடங்கினார்கள். தென்சீனக் கடலிலும், இந்தியப் பெருங்கடலிலும் விமான வேட்டை தொடர்ந்தது.

26 நாடுகள், போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், செயற்கைக் கோள்கள் சகிதமாக, மாபெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன. 40 நாட்களுக்கு மேலாகியும் ஒரு துரும்பைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்கு நடுவே, விமானத்தின் தகவல் தொடர்பு முறைகள் திட்டமிட்டே செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன, விமானம் ராடாரில் இருந்து மறைந்ததன் பிறகு 5 மணி நேரம் கழித்து விமானத்தில் இருந்து சமிக்ஞைகள் பெறப்பட்டதாக பிரிட்டிஷ் தொலைத்தொடர்பு நிறுவனம் தெரிவித்தது, விமானம் கடத்தப்பட்டிருக்கக்கூடும் என வல்லுநர்கள் கோடிட்டுக் காட்டியது ஆகிய 3 விஷயங்கள் மர்மத்தை அதிகரித்தன.

செயற்கைக்கோள் அடிப்படையிலான புதிய தகவல்களின்படி, தீபகற்ப மலேசியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைக் கடப்பதற்குச் சற்று முன்னதாக, விமானத்தின் தகவல்தொடர்பு முறைகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறமுடியும். அதைத் தொடர்ந்து சிறிது நேரத்தில், மலேசிய –வியட்நாம் எல்லைக்கு நடுவே விமானத்தின் டிரான்ஸ்பாண்டர் (வான்வழிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் விமானத்தை அடையாளம் காண்பதற்கும், அதன் தடம்பற்றுவதற்கும் பயன்படும் ரேடியோ அலைக் கருவி) அணைக்கப்பட்டிருக்கிறது. மலேசிய விமானப் படை ராடாரிலிருந்து கிடைத்த தரவுகள் காட்டுவதன்படி, விமானம் மேற்குநோக்கி தீபகற்ப மலேசியாவை நோக்கித் திரும்பி, அதன் பிறகு வடமேற்காகச் சென்றுள்ளது. விமானத்திலிருந்த யாரோ

(புதிர் தொடரும்....)




"மாதநிலா" சஞ்சிகையின் அற்புத படைப்புகளில் ஒன்றான

# "அன்புக்கரம்"

பாடசாலை சென்று கற்பதற்கான கற்றல் உபகரணங்கள் வாங்கிக்கொள்ள முடியாமல் உள்ள மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த "அன்புக்கரம்".

மாணவர்களே! நீங்கள் வறுமையின் காரணமாக பாடசாலைக்குச் செல்ல கற்றல் உபகரணங்கள் வாங்க முடியவில்லையா? அப்படியாயின் கவலையை விடுங்கள் எங்கள் அன்புக்கரம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

எங்களுடைய வழமையான முகவரிக்கு நேரில் வாருங்கள்.

வறுமையின் காரணமாக கல்விகற்க
முடியாமல் இருக்கும் அனைத்து மாணவர்களுக்காகவும்
உருவாக்கப்பட்டதே இந்த அன்புக்கரம்

"உங்கள் மூன்றாவது கரம்"


எதிர்பாருங்கள்

எமது சஞ்சிகை ஒவ்வொரு மாதத்தின்
முதல் ஐந்து நாட்களுக்குள் வெளிவரும்

என்பதை வாசகர்களுக்கு
அறியத்தருகின்றோம்

## ஓகன் பயிற்சி வகுப்புக்கள்


நன்கு தேர்ச்சி பெற்ற
ஆசிரியரினால்
பிரத்தியேக வகுப்புக்கள்
நடைபெறுகின்றன





தொடர்புகளுக்கு...
077 900 94 91

# பேஸ்புக்கில் சுட்டதில் பட்டது


















# சிந்தனைச் சிதறல் 12


## இம்மாதச் சிதறல்



துளிர்விட்டதும் கையேந்தி பிச்சைகேட்டு நிற்கும்
இந்த மழலைகளின் எதிர்காலம் தான் என்ன?
இவர்கள் செய்த குற்றம் தான் என்ன?

வாசகர்களே!
மாதம் ஒவ்வொன்றிலும்
சிந்தனைச் சிதறலாக வரும் உருவப்படத்திற்கு
உங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும்
பலதிசைகளில் சிதறுகின்றன. அவைகளை
உணர்வுமிக்க பத்துவரிகளுக்குள் எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்புங்கள்

## மே மாதச் சிதறல்



### பணப்பரிசு பெறும் கவிதைகள்

**1**

வாய் மூலம்
உன் நுரையீரலுக்கு
நீ அனுப்பும் புகை...
உன் மரணத்திற்கு நீ
அனுப்பும் முதல் செய்தி

**ஆர்.வித்யாஷினி**
41, வெளிக்குளம், வவுனியா.

**2**

சிகரட்டே! உன் மீது மோகம்கொண்டு
உனக்கு தீமூட்டி – உன்
உடலை சாம்பலாக்கியதற்கு
நீ கொடுக்கும் தண்டனைதானா
புற்றுநோய்!

**தவேந்திரன்**
வவுனியா

**3**

உன்னை அழிக்கும்
என்று தெரிந்தும்
அழகாய் முத்தமிடுகிறாயே
உன் இருவிரல்
இடுக்கினில் இருப்பது
மரணப்பாதையை நோக்கி
உனை நகர்த்திச் செல்லும்
பிசாசு என்பதை மறந்துவிட்டாயோ?

**பிரியதர்ஷினி பிரகாசம்**
பாரதிபுரம், வவுனியா

### பாராட்டு பெறும் கவிதை

ஓ..மனிதா...
நீ சாம்பராவதற்கு
உன் வாயில்
நீயே மூட்டும்
தீ!

**திருமதி.ஆர்.செந்தில்குமாரி**
கோவிற்குளம், இந்துக்கல்லூரி
வவுனியா

சிந்தனைச் சிதறலுக்கான
பணப்பரிசு தொகை விபரம்

**1ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 500/-**
**2ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 300/-**
**3ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 200/-**

சிந்தனைச் சிதறலுக்கு
பிரதான அனுசரணை:
சர்வதேச மொழித்திறன் விருத்தி நிறுவனம்
ILSDI
Skills of Languages
French | Deutsch | Italian | Dutch
Korean | Danish | English | Sinhala
Tamil | IELTS | TOEFL | Ket(A1,A2)
இம்மாதம் முதல் இடம் மாற்றம்
No:148, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
024 5610154 / 077 3493285

## 43 விநாடியில் 95 மாடிகளை கடக்கும் அதிவேக லிப்ட்



சீனாவின் குவாங்/ நகரில் 111 அடுக்கு மாடியுடன் கூடிய சி.டி.எப். நிதி நிறுவன மையம் கட்டப்பட்டு வருகிறது. 530 மீட்டர் உயரக் கொண்ட அந்தக் கட்டடத்தின் திறப்பு விழா வருகிற 2016 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது.

அந்த அடுக்குமாடி கட்டடத்தில் தற்போது லிப்ட் பொருத்தப்பட்டு வருகிறது. இதை ஜப்பானின் ஹிட்டாச்சி நிறுவனம் தயாரித்துள்ளது. இது அதிவேகத்தில் இயங்க கூடியது. இந்த லிப்ட் 43 விநாடிகளில் 95 மாடிகளை கடக்கும் திறன் படைத்தது. இதுபோன்ற 2 லிப்டுகள் இங்கு பொருத்தப்படுகிறது. இது இரட்டை அடுக்கு மாடிகளை கொண்டது.

சக்தி வாய்ந்த காந்தசக்தி இன்ஜின் மூலம் தயாரிக்கப் படும் இந்த லிப்ட் உலகிலேயே அதிவேகமாக இயங்கும் திறன் கொண்டது என்ற பெருமை பெறுகிறது.

## அதிசயங்கள் நிறைந்தது மனித உடல்

மனிதன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவனுடைய உயரம் 8 மில்லி மீட்டர் அதிகரிக்கும். தூங்கி எழுந்ததும் மீண்டும் பழைய உயரமே ஆகிவிடும். மனிதன் நிற்கும்போதும், உட்காரும்போதும் புவி ஈர்ப்பு விசையின் காரணமாக எலும்புகளின் மீது ஏற்படும் அழுத்தமே இதற்கு காரணமாகும்.

நமது உடல் எடையில் 14 வீதம் எலும்புகளும், 7 வீதம் ரத்தமும் உள்ளன.

நுரையீரலில் 300,00 மில்லியன் ரத்த நாளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டால் அது பிரமிப்பூட்டும் 2400 கிலோமீட்டர் நீளமாக இருக்கும்.

ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிப்பான்களைக் (Filters) கொண்டது. அவை ஒரு நிமிடத்திற்கு 1.3 லிட்டர் ரத்தத்தை வடிகட்டுகிறன. ஒரு நாளில் 1.4 லிட்டர் சிறுநீரை வெளியேற்றுகின்றன.

மனிதனின் ஒவ்வொரு ரத்த அணுவும் உடல் முழுவதையும் சுற்றிவர 60 வினாடிகள் மட்டுமே எடுத்துக் கொள்கின்றன.

மனித உடலின் மிகப்பெரிய செல் பெண்ணின் கருமுட்டையாகும், மிகச்சிறிய செல் ஆணின் விந்தணுவாகும்.

நமது உடலில் உள்ள ரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 6,00,000 மைல்களாகும் அதாவது பூமியை இரண்டு முறை வலம் வந்துவிடும் நீளம் இது.


கண்களின் தசையானது ஒருநாளில் 1,00,000 முறை அசைகிறது. இதற்கு சமமான வேலையை கால்களுக்கு கொடுக்க வேண்டுமென்றால் தினமும் 80 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும்.

மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 200 தசைகள் இயங்க வேண்டும்.

காலின் பெருவிரல் இரண்டு எலும்புகளை கொண்டது. ஆனால் மற்ற விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளை கொண்டிருக்கும்.

அளந்து பார்த்துக் கொள்ளுங்கள் கட்டை விரலின் நீளமும், மூக்கின் நீளமும் சமமாக இருக்கும்.

மனித கால்களில் ஒரு ட்ரில்லியன் பாக்டீரியாக்கள் இருக்கும்.



நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம். கண்கள் 500 வகையான ஒளிகளை பிரித்தறியும் சக்தி கொண்டவை.

மனித மூளையில் சுமார் 100 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன, 35 வயது அடைந்ததும் நாள்தோறும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்சிஜனில் 20 வீதம் மூளை பயன்படுத்திக் கொள்கிறது.


நமது மூளை 80 வீதம் நீரால் ஆனது, மூளையின் செயல்திறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

மனிதன் உயிரிழந்த பின்பு ஒவ்வொரு உறுப்பும் செயல் இழக்கும் நேரங்களில் வேறுபாடு உண்டு.

கண்கள்– 31 நிமிடம், மூளை– 10 நிமிடம், கால்கள்– 4 மணி நேரம், தசைகள்– 5 நாட்கள், இதயம்– சில நிமிடங்களிலேயே செயலிழந்து விடுகிறது.

# அறிவுக்கு சவால் 9

குறுக்கெழுத்துப் போட்டி (மாதநிலா குட்டீஸ்களுக்கானது)




**இடமிருந்து வலம்**

1. காட்டுக்கு ராஜா எனப்பெயர் பெற்ற விலங்கு
2. தந்திரமுள்ள மிருகம் (திரும்பியுள்ளது)
3. பால் பெறப்படுவது இதிலிருந்து
4. தண்ணீர் கொண்டுபோக பயண்படுவது

**மேலிருந்து கீழ்**

1. அழுகை என்பதன் எதிர்ச்சொல்
3. ஆடிக்காற்றில் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு (குழம்பியுள்ளது)
4. பருகு
5. ஒட்டுவதற்குப் பயன்படும் இது ஆங்கிலத்தில் (தலைகீழ்)

குட்டிஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்

**போட்டிகளுக்கான விடைகளை மட்டும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்**
**பயிற்சிகளை அனுப்பத்தேவையில்லை**
**அவைகள் நீங்கள் செய்து பழக மாத்திரமே**

மே மாதத்திற்கான அறிவுக்கு சவால் போட்டிக்கு ஏராளமான குட்டீஸ்கள் சரியான பதில்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். அவற்றிலிருந்து குலுக்கள் மூலம் தெரிவு செய்து பரிசைப் பெறும் 3 குட்டீஸ்கள்.

**டிலக்ஷனா**
தரம்:5E, யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் றக்கா வீதி, யாழ்ப்பாணம்

**பிரமிளா ஜீனா**
தரம்: 5, மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி.

**எறின்டினுஜா**
தரம்:3C, யா/திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலை. வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**1** மே மாதத்திற்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் ஈச்சங்குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 2B இல் கல்வி கற்கும் **தி.கவீசன்** ஈச்சங்குளம், சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.

**2** 2ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரியில் தரம் 4இல் கல்வி கற்கும் **ச.பிரதீபன்** பரசங்குளம், புளியங்குளம், வவுனியா.

**3** 3ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கும் **செல்வன்.கமல்** மகாறம்பைக்குளம், வவுனியா.

## மாணவர் அரங்கம்

மாணவச் செல்வங்களே, 'மாணவர் அரங்கம்' என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, தொ.பே.இல, பாடசாலை, வகுப்பு ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்

## சிரிப்பு..

**கணவன்:** நான் செத்துப்போனா நீ வேற கல்யாணம் பண்ணிக்குவியா?
**மனைவி:** என்ன பேசுறீங்கள், நான் என் தங்கச்சிகூடவே மீதி காலத்த வாழ்ந்திடுவன்
**மனைவி:** ஏங்க நான் செத்துப்போனா,
**கணவன்:** நானும் என் மீதி காலத்த உன் தங்கச்சி கூடவே வாழ்ந்திடுவன்.

# பாலியல் நெறிபிறழ்வும் இன்றைய சமூகத்தின் பொறுப்பும்



**கார்த்திகா மணிவண்ணன்**
மாவட்டச் செயலகம்
வவுனியா.

உங்களை
எவரேனும் ஒருவர்
துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினால்
உங்களின் நம்பிக்கைக்குரிய ஒருவருக்குத் தெரியப்படுத்துங்கள்

உங்கள் உடல் உங்களுக்கு மட்டுமே சொந்தமானது உங்களைத் தொடுவதற்கும், அன்புமுத்தங்களையும் அரவணைப்புக்களையும் தரக்கூடியவர்கள் யார் என்பதனையும் அவ்வாறான தொடுகைகளை அறிந்திருக்கவும் கற்றுக்கொள்ளுங்கள்

ஏதேனுமொரு விதமாக நீங்கள் நெறிபிறழ்வான நடத்தைக்கு இலக்காகுமிடத்து அதனை நினைத்து வருந்துவதன் மூலம் குற்ற உணர்ச்சிக்கு இடமளிக்காதீர்கள். மேலும் மற்றவர் உங்கள் மீது குற்றம் சுமத்தவும் இடமளிக்காதீர்கள்.

பாலியலானது பசி, தாகம் போன்று இயற்கையானது என்ற சிந்தனை நோக்கத்தக்கது. எனவே இயற்கையான இவ்வுணர்வை உரிய முறையில் வெளிப்படுத்துவதன் மூலம் மேற்கூறப்பட்ட பாலியல் நெறிபிறழ்வுகளிலிருந்து எமது சமூகங்களைக் காத்துகொள்ள முடியும்.

**நல்லதொடுகை, கெட்டதொடுகை**



நல்ல தொடுகை | விரும்பத்தகாத தொடுகை | கெட்ட தொடுகை

**இலங்கையில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை செவிசாய்க்கவும் தீர்வு வழங்கவும் 24 மணித்தியாலமும் தயாராக இருக்கும் இலங்கை சிறுவர் தொலைபேசி இலக்கம்**

**1929**

**பெண்கள் சார்ந்த வன்முறைகளைச் செவிசாய்க்கவும் தீர்வு வழங்கவும் உள்ள தொலைபேசி இலக்கம்**

**1938**

(முற்றும்)

## ஆங்கிலச் சொல் தருக,

1. கிழமை :……………………………… 6.சமையல் :………………………………
2.நிலம் :……………………………… 7.புகையிரதம் :………………………………
3.வாகனம் :……………………………… 8.பாட்டு :………………………………
4.செருப்பு :……………………………… 9.கோவில் :………………………………
5.பகல் :……………………………… 10.சங்கிலி :………………………………

## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1.மீன்கொத்தி பறவை ……………………… விரும்பி உண்ணும்
2. பாடசாலை விடுமுறையைக் கழிக்க மாணவர்கள் ……………………… சென்றார்கள்
3. காலையில் எழுந்தவுடன் ……………………… பாதங்களை தொட்டு வணங்குவது நன்று.
4. பல் வைத்தியர்கள் கூறுவது தினமும் ……………………… பல்துலக்க வேண்டும் என்பது.
5. எதிர்கால தலைவர்கள் ………………………

மாணவர்களே. பெற்றோர்களின், இருமுறை, சுற்றுலா, மீன்களையே,

**இம்மாத குட்டீஸாக அட்டை படத்தை அலங்கரிப்பவர்**

**சூசைதாஸன் தர்சிகா**

சிலாவத்தை, முல்லைத்தீவு.

"இம்மாத குட்டிஸ்" நீங்களா,
அப்படியாயின் உங்களது
வர்ண புகைப்படத்துடன்
பெயர், முகவரி, பாடசாலை,
வகுப்பு போன்ற விபரங்களையும்
எங்களுக்கு
அனுப்பி வையுங்கள்,
தெரிவு செய்யப்படும்
புகைப்படம்
இம்மாத குட்டிஸ்
பகுதியாக அட்டையில்
பிரசுரிக்கப்படும்.

**(தரம் 7 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**

## விடுகதைகள்

1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

2. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?

3. காக்கை போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?

4. தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?

5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?

6. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, தொட்டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?

7. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?

8. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான் அவன் யார்?

9. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

10. நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

என்ன குட்டீஸ்களே! விடைகளை கண்டுபிடிக்க முடியவில்லையா? 15ம் பக்கம் செல்லுங்கள்

## மெட்டி ஒலி சீரியல் படப்பிடிப்பை வேடிக்கை பார்த்தபோது நடிக்க வாய்ப்பு கிடைத்தது. நடிகை லதா ராவ்

அப்பா தர்மபுரி, அம்மா கோயம்புத்தூர். நான் வளர்ந்தது சத்தியமங்கலத்தில். நடிகையாவேன் என கனவில் கூட நினைத்தது கிடையாது. பள்ளி விடுமுறையில் உறவினர் திருமணத்திற்காகக் குடும்பத்துடன் சென்னை வந்திருந்தோம். அப்போது ஓரிடத்தில் "மெட்டி ஒலி" சீரியலின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. அதை வேடிக்கைப் பார்க்கப் போனபோது, "நடிக்க விருப்பமா?" என்று கேட்டார்கள். "நடிக்கலாமே!" என்றேன்.

அந்த சீரியலில் இயக்குநர் திருமுருகனின் தங்கையாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது"" – தொலைக்காட்சியில் நடிக்க ஆரம்பித்ததை நினைவுபடுத்தியபடி பேசத் தொடங்குகிறார் லதா ராவ். நடிகை, நிகழ்ச்சித் தொகுப்பாளர், குடும்பத் தலைவி, பாசமான அம்மா, அன்பான மனைவி, அக்கறையான மகள் என அனைத்தையும் ஒற்றை ஆளாகத் திறம்படக் கையாள்பவர். இவருடைய கணவர் ராஜ் கமலும் டிவி பிரபலம் தான்.

""திருமுருகன் இயக்கத்தில் "மெட்டி ஒலி" சீரியலுக்குப் பிறகு, வேறு என்ன தொடர்களில் நடித்தீர்கள்?

"அப்பா", "மனைவி" என வரிசையாக சீரியல்களில் நடித்தேன். "மனைவி" சீரியலில் என் கதாபாத்தி... ம் அவ்வளவு அருமைய... க இருக்கும். அனுபவித்... து நடித்த கதாபாத்... திரம் அது. இண்ட... ஸ்ட்ரிக்கு வந்து... 10 வருடங்க ளுக்கு மேல்



ஆகிவிட்டது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என தென்னிந்திய மொழிகள் அனைத்திலும் 35க்கும் மேற்பட்ட சீரியல்களில் நடித்துவிட்டேன்.

சினிமா வாய்ப்பு குறித்து?

எல்லோருக்குமே சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். சீரியலில் தினமும் நாம் சீனில் வந்தால்தான் நம்மை ஞாபகம் இருக்கும். ஆனால், சினிமா என்பது வரலாறு. நூறு வருடங்கள் கழிந்தாலும் திரும்பிப் பார்க்க முடியும். எனவே, வரலாற்றில் இடம்பிடிக்கத்தான் அனைவரும் விரும்புவார்கள். ஒரு நடிகையாக நானும் ஆசைப்பட்டேன். "தில்லாலங்கடி" தான் என்னுடைய முதல் படம். வடிவேலுவுக்கு ஜோடியா நடித்திருந்தேன். பிறகு, "ஈசன்", "நிமிர்ந்து நில்", "ஒரு கன்னியும் மூன்று களவாணிகளும்" என சினிமா வாய்ப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சின்னச் சின்னக் கதாபாத்திரங்களில் நடித்திருந்தாலும் பேசப்படக் கூடிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறேன். பெரிய அளவிலான, நடிப்பதற்கு வாய்ப்புள்ள கதாபாத்திரங்களில் நடிக்க ஆசை. அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்"" என்று முடித்தார்.

அதன்பின்னர் அவருடைய கணவர் ராஜ்கமல் அளித்த பேட்டி

ஜெய்சங்கருக்கும் உங்களுக்கும் என்ன உறவுமுறை?

""சொந்த ஊர் திருச்சி. பி.காம். முடிச்சதும் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசையில் சென்னைக்கு வந்தேன். நடிகர் ஜெய்சங்கரின் தூரத்து சொந்தக்காரன் நான். அவர் வீட்டிலேயே தங்கி வாய்ப்பு தேடிக் கொண்டிருந்தேன். ஆனால், சில மாதங்களிலேயே அவர் இறந்துவிட, அந்த வீட்டில் இருந்து வெளியேற வேண்டிய சூழல். இருந்தாலும், ஆர்வத்தை விட்டுவிடாமல் வாய்ப்பு தேடும் கூட்டத்தில் நானும் ஒருவனாக கோடம்பாக்கத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன். இயக்குநர்

சினிமா அறிமுகம் எப்படி கிடைத்தது?

கே.பாலசந்தரின் உதவியாளர் மூலமா அவருடைய அறிமுகம் கிடைத்தது. அப்போது "சஹானா" சீரியல் ஆரம்பித்தார்கள். அதில், நான்கு கதாநாயகர்களில் ஒருவராக எனக்கு வாய்ப்பு கிடைத்தது. கே.பி.யின் ஒரு நாடகத்தில் நடித்தாலே நல்ல நடிகன் என்ற பெயர் இருந்தது. இதனால், அவரின் யூனிட்டில் இருந்தே அடுத்தடுத்து 11 சீரியலில் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. மோகன்ராம், ரேணுகா போல நானும் கே.பி.யின் கம்பெனி ஆர்ட்டிஸ்டாக ஆகிவிட்டேன்.

அப்படியே வாழ்க்கை தொடர்ந்து போய்க்கொண்டே இருந்தது. இடையில், "ஜோடி நம்பர் 1", "மஸ்தானா மஸ்தானா", "மானாட மயிலாட" என நடன நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டோம். பிஸியாகவே இருந்ததால், குழந்தை பற்றி யோசிக்கவே இல்லை. இந்த நிகழ்ச்சிகளில் ஆடி முடித்தபிறகு குழந்தை பெற்றுக்கொள்ள முடிவெடுத்தோம். பெண் குழந்தை

பிறந்தது. இப்படித் தொடர்ந்து ஏதாவது கமிட்மெண்ட் இருந்ததால், தொடர்ந்து டிவியிலேயே நடிக்க வேண்டிய சூழ்நிலை. வேறு வழியில்லாமல் குடும்பத்தைக் காப்பாற்றியாக வேண்டுமே என்பதற்காக நடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், சினிமாவில் நடிக்கும் ஆசை என்னைவிட்டு நீங்கவில்லை.


கதாநாயகனாக நடிக்க வேண்டும் என எப்போதுமே நான் நினைத்தது கிடையாது. பிரகாஷ்ராஜ், ரகுவரன் போல எந்தக் கதாபாத்திரம் கொடுத்தாலும் நடிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். வடஇந்தியாவில் இருக்கும் பெருந்தன்மை இங்கு கிடையாது. அங்கெல்லாம் டிவி ஆர்ட்டிஸ்டாக இருந்தாலும் படங்களில் வாய்ப்பு கொடுக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட வாய்ப்பு இங்குள்ளவர்களுக்குப் பெரும்பாலும் கிடைப்பதில்லை. எனவே, டிவியில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டு சினிமாவில் வாய்ப்பு தேடினேன். இரண்டு வருடங்களாக எந்த டிவி தொடரிலுமே நடிக்கவில்லை. சன் டிவியில் ஒளிபரப்பாகும் "மகாபாரதம்" தொடரில் வரும் அர்ஜுனன் கதாபாத்திரம் உள்பட இதுவரைக்கும் 15க்கும் மேற்பட்ட வாய்ப்புகளை மறுத்துவிட்டேன்.

பொதுவாக, சிறிது இடைவெளி விட்டு நடிக்க வருபவர்களுக்கு அதிகமான வாய்ப்புகள் கிடைக்கும். இரண்டு வருடங்களாக நான் நடிக்கவில்லை என்பதால், கடந்த மூன்று மாதங்களாக நிறைய தொடர்களுக்கான வாய்ப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், நான் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. விஜய் சேதுபதியும் டிவி தொடர்களில் நடித்தவர்தான். நான்கைந்து வருடக் காத்திருப்புக்குப் பின்னர்தான் அவருக்கு சினிமாவில் வாய்ப்பு கிடைத்தது. எனவே, நானும் காத்திருக்கிறேன்"" என்று முடிக்க, ""சினிமாவில் நடிப்பதைச் சொல்லலையே..."" என்று எடுத்துக் கொடுக்கிறார் லதா ராவ்.

"" "மேல்நாட்டு மருமகன்" படத்தில் கதாநாயகனாக நடிக்கிறேன். மகாபலிபுரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் கைடுக்கு, வெள்ளைக்காரியைக் காதலித்து, அவளுடனே வெளிநாடு போகவேண்டுமென்பது லட்சியம். இதுதான் படத்தின் கதை. பிரான்ஸைச் சேர்ந்த ஆண்ட்ரியன் ஹீரோயினாக நடிக்கிறார். "நினைவில் நின்றவள்" படத்தை இயக்கிய ஷாஜகான் இந்தப் படத்தை இயக்குகிறார். வேறுசில படங்களில் நடிக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. தவிர, ரியல் எஸ்டேட் விளம்பரங்களிலும் நடித்து வருகிறேன்"" என்றார் ராஜ் கமல்.

"உங்களுக்குள் காதல் மலர்ந்தது எப்போது?" என்று கேட்டோம். "" "ரெக்கை கட்டிய மனசு" சீரியலில் நான் ஹீரோ, லதா வில்லி. பார்த்துப் பழகியதும் பிடிச்சிப் போச்சி. நானே என் காதலைச் சொல்லிட்டேன்"" -என்ற ராஜ் கமலை இடைமறித்த லதா, ""இவர் காதலைச் சொல்லப் போறார்னு எனக்கு முன்கூட்டியே தெரிஞ்சி போச்சி. அவர் சொன்னதும் கண்டபடி திட்டிடணும்னு பிரிப்பேர் பண்ணி வைச்சிக்கிட்டேன். ஆனால், இவரோ என் முகத்தைக் கூட பார்க்கலை. எங்கேயோ பார்த்துக்கிட்டு, "எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. உங்க வீட்டுல எப்படியும் மாப்பிள்ளை பார்ப்பாங்க. உங்க சாய்ஸ் நானா இருந்தா சந்தோஷப்படுவேன். என்னுடைய சாய்ஸ் கண்டிப்பா நீங்கதான்"னு சொன்னார். எனக்குத் திட்டுறதுக்கு மனசே வரலை. பாரதிராஜா படம் மாதிரி வெள்ளை டிரெஸ் போட்டு தேவதைகள் ஆடுனதால ஒகே சொல்லிட்டேன். ஆனாலும், ஒரு விஷயத்துல மட்டும் தீர்மானமாக இருந்தேன். இரண்டு வீட்டுலயும் சம்மதிச்சாதான் கல்யாணம். இல்லைன்னா வேண்டாம்னு சொல்லிட்டேன். இரண்டு வீட்டிலுமே உடனே சம்மதம் கிடைத்துவிட்டது. ட்விஸ்ட், சண்டை எதுவுமே இல்லாத காதல் கல்யாணம் எங்களுடையது. அந்த அன்பின் வெளிப்பாடாக லாரா, ராகா என இரண்டு பெண்குழந்தைகள்"" என்றார்.

"நடிப்பு, குடும்பம் இரண்டையும் ஒரே நேரத்தில் எப்படி சமாளிக்கிறீர்கள்?" என்று கேட்டோம். ""நேரமே கிடைக்கவில்லை என்று நான் சொன்னது கிடையாது, சொல்லவும் மாட்டேன். எல்லா விஷயத்தையும் திட்டமிட்டு நாம்தானே தேதிகள் ஒதுக்கிக் கொடுக்கிறோம்? எனவே, அழகாக மேனேஜ் பண்ணலாம். இப்போது குழந்தைகளுக்காக சீரியல்களில் நடிப்பதை நிறுத்திவிட்டேன். சினிமாவில் நடிப்பது, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவது என இரண்டை மட்டும் பார்க்கிறேன். எங்கள் இருவரின் பெற்றோர்களும் எங்களுடன் தான் இருக்கிறார்கள் என்று முடித்தார் லதா ராவ்.



# மாதநிலா குட்டீஸ்

## சிறுகதை

# உன் திறமையை உணர்....


பள்ளியிலிருந்து வந்ததிலிருந்து ரமேஷ் அழுது கொண்டிருந்தான்.

அலுவலகத்திலிருந்து வந்த அப்பா ரமேஷிடம் அவன் அழுகைக்கான காரணத்தைக் கேட்டார்.

ரமேஷ், " அப்பா...நான் தொடர்ந்து காலாண்டு,அரையாண்டு தேர்வுகளில் கணக்கில் குறைவான மதிப்பெண்களே வாங்குகிறேன்..எனக்கு கணக்கு வராது...என்னால் அப்பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியாது....." என்றான்.

அதற்கு அப்பா..."ரமேஷ்...உனக்கு ஒரு கதை சொல்கிறேன் கேள்" என சொல்ல ஆரம்பித்தார்.

ஒருவனிடம் குட்டியானை ஒன்று இருந்தது.அது ஓடிவிடக்கூடாது என்பதற்காக ...ஒரு கயிற்றைக் கொண்டு அதன் காலில் கட்டி ...பக்கத்திலிருந்த தூணில் இணைத்துவிட்டான்.



யானை வளர்ந்து. பெரிய யானையானது.அது இப்போது நினைத்தால்...அந்த தூணுடன் சேர்ந்து கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடியிருக்க முடியும்.ஆனாலும் ...தான் குட்டியாயிருந்தபோது இருந்த பலமே இப்போதும் இருக்கிறது என யானை எண்ணியது.தன்னால் இப்போதும் தப்ப முடியாது என எண்ணியது. அது போல..உனக்கு கணக்கு வராமல் இருந்திருக்கலாம்..ஆனால் நீ முயன்றால் கணக்கில் புலி ஆகலாம்...

நீ செய்யவேண்டியதெல்லாம் ..."உன்னிடம் உள்ள திறமையை புரிந்து கொண்டு படிக்கவேண்டும்.நம்மால் முடியாது என நினைத்து சும்மா இருந்தால், யானையின் நிலை தான் உனக்கும்.. முயற்சி திருவினையாக்கும் என்பதை நினைவில் கொள்.

பின்னர், ரமேஷ் தன் திறமையை உணர்ந்து படித்து, கணிதத்தில் வகுப்பில் முதலிடத்தில் வந்தான்.

# கனடாவில் மனித மூளையை போன்று துல்லியமாக செயற்படும் செயற்கை மூளையை உருவாக்கி சாதனை



மனித உடலுக்கு தேவையான செயற்கை உறுப்புகளை விஞ்ஞானிகள் தயாரித்து வருகின்றனர். இந்த நிலையில் தற்போது செயற்கை மனித மூளையும் உருவாக்கப்பட்டுள்ளது. இது மனித மூளையை போன்று நுண்ணறிவுடன் செயல்படுகிறது. சூப்பர் கம்ப்யூட்டரில் பொருத்தப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கண் மற்றும் ரோபோடிக்கையும் உருவாக்கப்பட்டு அதன்மூலம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இந்த செயற்கை மூளை 25 லட்சம் நரம்பணுக்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஸ்பான் என பெயரிடப்பட்டுள்ளது.


இதை கனடாவில் உள்ள வாட்டர்லு பல்கலைக்கழக நரம்பியல் விஞ்ஞானிகள் மற்றும் கம்ப்யூட்டர் என்ஜி னீயர்கள் இணைந்து வடிவமைத்துள்ளனர். செயற்கையாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த மூளை மனித மூளையை போன்று துல்லியமாக செயல்படுகிறது. இது விஞ்ஞான உலகின் மிகப்பெரும் சாதனையாக கருதப்படுகிறது.

## விடுகதைக்கான விடைகள்


1. வாழைப்பூ
2. பேனா
3. நாவல் பழம்
4. தேங்காய்
5. காய்ந்த மிளகாய்
6. நீர்க்குமிழி
7. விரல்கள்
8. பம்பரம்
9. கிளி
10. பூனை

## எதிர்ப்பாற் சொல் தருக.

1. கனவு :..................
2. கடல் :..................
3. பார் :..................
4. பாலைவனம் :..................
5. அவள் :..................
6. ஏணி :..................
7. பூ :..................
8. நிலம் :..................
9. மா :..................
10. சுவர் :..................



## மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டத்தில் வரைக



# விழித்தெழுங்கள்



நல்லவர்களை கெட்டவர்கள் எனவும் கெட்டவர்களை நல்லவர்கள் எனவும் எண்ணுவதுதான் மனிதன் செய்யும் மாபெரும் தவறு ஏமாற்றப் பலர் இருப்பர், பழிவாங்கச் சிலர் துடிப்பர் எனவே எப்போதும் நம்மில் நிதானம் வேண்டும். உலகில் நட்பு என்ற பெயரில் பிணந்தின்னிக் கழுகுகள் இறக்கை கட்டிப் பறந்து கொண்டு தானிருக்கும் நச்சுப்பாம்புகள் கொஞ்சிவிளையாடத் துடிக்கும்.

நாம் சாலையோரம் பயணம் செய்யும்போது மான்களும் மரைகளும் மயில்களும் குயில்களும் மட்டுமா வருகின்றன. குரங்குகளும் கூடத்தானே வருகின்றன. அதற்காக நாம் பயணத்தை தொடராமல் பாதியிலே விட்டு விடுவோமா? அதைக்கண்டு பயந்து விடாதீர்கள் தெருவோரம் நாயொன்று எம்மைத் துரத்தும்போது நாம் அதனைக் கண்டு ஓடலாமா? திரும்பி ஒரு கல்லை எடுத்து வீசினாலே அது வந்தவழியே திரும்பி ஓடிவிடும் அதுபோலத்தான் துன்பங்களும் துயரங்களும் கவலைகளும் கஸ்டங்களும் எல்லாவற்றையும் தூக்கி எறியுங்கள் துணிந்து நில்லுங்கள்.

இளமையும் அழகும் பணமும் எம்மிடம் இருக்கும்வரை மட்டுமே இந்த உலகம் எம்முடன் ஒட்டி உறவாடும் இவையாவும் எம்மைவிட்டு விலகிவிட்டால் இவ்வுலகமும் எம்மைவிட்டு மெல்ல விலகிவிடும். இதுதான் உலகம், இந்த உலகத்தை நம்ப நடவுங்கள், நம்பி நடவாதீர்கள்.

அவமானப்படுத்துவதும் அவதுாறாகப் பேசுவதும் சிலருக்கு அலாதிப் பிரியம் அதனையிட்டு நீங்கள் மனசுடைந்து போகாதீர்கள் என்றோ ஓர்அநாள் அந்த வலியும் வேதனையும் அவர்கள் அடையும்போது அதன் வருத்தம் புரியும். கோட்டான்களுக்கும் கருக்குருவிகளுக்கும் பயந்து மூலைக்குள் முடங்கிக் கிடக்காதீர்கள். எல்லாவற்றையும் நீங்கள் எதிரியின் சவாலாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் முயற்சி என்னும் படிக்கற்களில் முன்னேறிக்கொண்டிருக்கும்போது சில விசக்கிருமிகள் எட்டி உதைக்கும் சோர்ந்து போகாதீர்கள். ஆதரவை விட மற்றவனின் வெறுப்புத்தான் எமக்கு விவேகத்தையும் வேகத்தையும் கூட்டித்தரும். இதுவே எமக்கு வெற்றியையும் ஈட்டித்தரும்.

துன்பம் வரும்போது துடைத்துவிடுவதும் கஸ்டம் வரும்போது கைகொடுப்பதும் மனிதப்பண்புதான் அதற்காக உதவிசெய்யப்போய் உபத்திரவம் அடையாதீர்கள். ஏனென்றால் மனிதம் செத்துப் போய்விட்டது. மனிதாபிமானம் மறைந்துபோய்விட்டது. எனவே நிதானியுங்கள்.

இந்த உலகமே பொய். போலி, மாயை இந்த மாயை உலகில் கல்வியைக் கற்றுக்கொள்ளுங்கள் பணத்தைத் தேடுங்கள் கல்வி எங்களுக்கு வழிகாட்டும், பணம் எங்களை வாழவைக்கும். மனிதனாக்கும். மாற்றுவதும் மாறுவதுமே வாழ்க்கை. ஏமாற்றுவதும் ஏமாறுவதும் அல்ல. எனவே மாற்றுங்கள் மாறுங்கள் வெற்றி நிச்சயம்.






## உங்களுக்குத் தெரியுமா ?

**தூக்கணாங்குருவிகளின் வாழ்வியல் சரித்திரம்.**

ஆண் குருவி கூடு கட்டும் . பெண் குருவி சோதித்துப் பார்க்கும் . அந்தக் கூடு சரியில்லையென்றால் பெண் குருவி அந்தக் கூட்டில் வாழாது . கூட்டையும் நிராகரித்துவிட்டு தன் இணை ஆண் குருவியையும் பெண் குருவி நிராகரித்துவிடுகிறது . பெண் உரிமையை சொல்லாமல் சொல்கின்றன .

**உலகில் முதன்முதல் தோன்றிய பத்திரிகை எது ?**

“ இட்ச்சிங் பங் “ என்ற சீன தினசரியே உலகில் முதன்முதல் வெளியான பத்திரிகை . அது கி. பி . 910 – முதல் பெய்யிங் நகரிலிருந்து வெளிவருகிறது . இதன் ஆசிரியர்களில் 800 பேருக்கு மேல் தங்கள் உயிரை “அச்சுச் சட்ட” த்தினால் இழந்திருக்கிறார்களாம் .

**வக்கீல்கள் ஏன் கறுப்பு கவுன் அணிகிறார்கள் ?**

கி. பி . 1714 – ல் இங்கிலாந்து தேச ராணியான ஆன் இறந்ததும், சீமை வக்கீல்கள் வெகுநாள் வரை கறுப்புச் சட்டை அணிந்து துக்கம் கொண்டாடினார்களாம். அந்தக் கறுப்பு சட்டை கடைசியில் அவர்கள் தொழிலின் சின்னமாகிவிட்டது .

# அனைவரும் தெரிந்துக்கொள்ள வேண்டிய சுவாரஸ்யமான தகவல்கள்

மலைப்பாம்பு இறகு, முடி தவிர மற்ற அனைத்தையும் ஜீரணித்துவிடும்.

200 கோடி பேருக்கு ஒருவர் தான் 116 வயதைக் கடந்து வாழ்கிறார்கள்.

நத்தைகள் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வரை தூங்கக் கூடியது.

ராக்கூன் என்ற விலங்கு உணவை நீரில் கழுவிய பிறகே உண்ணும் வழக்கமுடையது.

ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

பெண் சிலந்திப் பூச்சிகள், ஆண் சிலந்தியுடனான உறவுக்குப் பின் அதைக் கொன்று விடுகின்றன.

மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டால்பினுக்கு உண்டு.

பூனைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகின்றன.

மனித மூளையின் வளர்ச்சி பிறக்கும் போது 340 கிராம், 6வது மாதத்தில் 750 கிராம், 1 வயதில் 970 கிராம், 2 வயதில் 1150 கிராம், 3 வயதில் 1200 கிராம், 6 வயதில் 1250 கிராம், 9 வயதில் 1300 கிராம், 12 வயதில் 1350 கிராம், 20 வயதில் 1400 கிராம், 12 ஆண்டுகளுக்கு பின்பு மூளை 8 ஆண்டுகள் வரை 50 கிராமே வளர்கிறது.

அரளிச் செடிகள் விபத்தை குறைக்கிறது ஏனெனில் வாகனங்களில் இருந்து வரும் ஒளியின் பிரதிபலிப்பை உட்கிரகித்து குறைக்கும் தன்மையை பெற்றுள்ளன. அதனால் தான் பைபாஸ் சாலை மற்றும் நான்கு வழிச் சாலைகளில் அரளிச் செடிகள் வைக்கபட்டுள்ளன. இதற்கு தண்ணீர் அதிகம் தேவையில்லை. இவை ஆராய்ச்சிபூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது

வடக்கே தலை வைத்து உறங்கக்கூடாது, யமன் பிடித்துக்கொண்டு போய்விடுவான் என்று பல பூதாகரக் கதைகள் கேட்டிருப்பீர்கள். இது போன்று எழுதப்படாத நியதிகள் பல நம் கலாச்சாரத்தில் இன்றும் உலவிக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இதென்ன பகட்டா இல்லை நம்மை மிரளச் செய்யும் தந்திரமா? விளக்குகிறார் சத்குரு...


இந்தியா போன்று பூமத்திய ரேகைக்கு மேலே உள்ள நாடுகளில் இருப்பவர்கள் வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது. ஏனெனில் வடக்கே காந்த ஈர்ப்பு இருக்கிறது. வடக்கே தலைவைத்துப் படுத்தால் தேவையில்லாமல் உங்கள் மூளைக்குள் அதிக ரத்தம் பாயும். அப்போது உங்களுக்கு மனப் போராட்டம் போன்றவை ஏற்படலாம்.

மிகவும் வயதானவர் வடக்கே தலைவைத்துப் படுக்கும்போது, ரத்தம் மூளைக்குள் அதிகமாகப் பாய்வதால் அவர் தூக்கத்திலேயே உயிர்விட வாய்ப்பு இருக்கிறது. மூளைக்குச் செல்லும் நரம்புகள் மயிரிழை போன்றவை. எனவே ஒரு சொட்டு ரத்தம் அதிகம் சென்றாலும் மூளை நரம்புகள் வெடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் பகலானாலும் சரி, இரவானாலும் சரி, வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது.

## மது குடிப்பதால் 10 வினாடிக்கு ஒரு நபர் உயிரிழப்பதாக அதிர்ச்சித் தகவல்

உலகெங்கும் அதிக அளவில் மது குடிப்பதால் 10 வினாடிகளுக்கு ஒரு நபர் உயிரிழப்பதாக உலக சுகாதார மையம் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

மதுபழக்கம் தொடர்பான உலக சுகாதார மையத்தின் இந்த புதிய அறிக்கையில் கடந்த 2012 ஆம் ஆண்டு அதிக அளவில் மது குடித்ததால் 3.3 மில்லியன் மக்கள் உயிரிழந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பெரிய வீட்டு கமலி

–காதல் தொடர்கதை

' நான் 'அன்பு',

'எந்த அன்பு.... சின்னாயக்கா மகனா?' என்றதும்.

'ஆமா. ஞாபகம் இருக்குங்களா. நான் உங்க ஊருக்குப் பக்கமாத்தான் இருக்கேன். சுப்பு சொன்னான்'

'ஓஹ் அப்படியா, சந்தோசம்ங்க. எவ்வளவு வருசம் இருக்கும்? 20 இருக்குமா?'

பிறகு இரு குடும்பங்களைப் பற்றி பேசி, அடுத்தவார இறுதிக்கு கமலி வீட்டுக்கு போவதென்று தீர்மானம் ஆச்சு. கடைசி வரைக்கும் அந்த டைரி மேட்டரைப் பத்தி நானும் பேசலை. அவுங்களும் பேசலை.

வெள்ளிக்கிழமை என்னிக்கு வருமென்று காத்திருந்தாள். வீட்டுக்காரரிடம் அன்று இரவே சொல்லிவிட்டாள் 'எங்க ஊர்க்காரங்க

வராங்க. சனிக்கிழமை எங்கேயும் போயிரக் கூடாது, ஆமா.' அவரும் சரியென தலையாட்டிவிட்டு போய்விட்டார். என்ன சமைப்பது என அன்றே பட்டியல் போட ஆரம்பித்தாள். என்றுமில்லாத அதியசமாக அன்று மளிகை கடைக்கு அவரை வற்புறுத்தாமல் தானே போய் வந்தாள்.

என்ன துணி போட்டுக்கலாம்? புடவை? சுடிதார்? ஜீன்ஸ் டீ சர்ட் ? குழப்பம் அதிமாகிக்கொண்டே இருந்தது. கடைசியாக ஒரு கேள்வி அவனைத் தாக்கியது "அந்தக் கடிதத்தை யாரும் படிச்சிருக்க மாட்டாங்கதானே? அது அந்தப் புஸ்தகத்துக்கு உள்ளேதானே இருக்கும்?"

வெள்ளிவரை வேலை கழுத்தை நெரித்தது. இடையிடையே கமலி ஞாபகம் வந்துவிட்டுப் போனது. என் காதல் தெரிந்த மாதிரி அவளுடைய வீட்டுக்காரருக்கும் அவள் சொல்லியிருப்பாளா? ஆமா, அவ என்கிட்டயே சொல்லலை என்ற நினைப்பு வந்த போது சிரித்துவிட்டேன்.

சனிக்கிழமை,

பத்து மணி. எங்கேம்மா போறோம் என்று இரு குழந்தைகளும் கேட்டபோது 'என்னங்க சொல்லிரலாமா' என்று நமுட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தாள் வீட்டம்மா. குசும்பு புடிச்ச கோயமுத்தூர்காரங்க என மனசுக்குள் நினைத்துக்கொண்டே 'ஒரு அங்கிள் வீட்டுக்கு போறோம்மா. அவுங்க எங்க ஊரு' என்று நெஞ்சை நிமிர்த்தி சொன்னேன். குழந்தைங்க (13,16 வயசு ஆனாலும் குழந்தைங்க தானே) சலிப்போடு உட்காந்தார்கள், பாவம் அவர்களுக்கு என்ன முக்கியமா இருக்கோ? எங்க ஊரு, ஒரே பள்ளிக்கூடம், கல்லூரி, விமான நிலையத்துல பார்த்தது, வேலை செய்ததுன்னு மாசம் ஒரு முறை யாராவது ஒரு வீட்டிற்கு இப்படி கூட்டிப் போவது பழக்கமாகிவிட்டிருந்தது. போகும் 1 மணிநேரத்தில் சீட்டில் மூவரும் ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்துவிட்டார்கள். சரியாக மதியம் சாப்பாட்டுக்கு போன மாதிரி வீட்டிற்கு முன்னால் வண்டி நின்றது.

பெரிய வீடு, கண்டிப்பாய் ஊரிலிருந்த பெரிய வீட்டில் பாதி கூட இல்லை, இருந்தாலும் அந்தத் தெருவிலேயே பெரிய வீடாய் இருந்தது. சுப்பு சொன்ன "ஜம்முன்னு இருக்கிறாடா" ஞாபகத்துக்கு வந்தது. அழைப்பு மணி அழுத்துமுன்னே செந்தில்(கமலியின் வீட்டுக்காரர்) கதவைத் திறந்தார். என்னைப் போலில்லாமல், சின்னத் தொப்பையுடன், முன் விழுந்த முடியுமாக இருந்தார். சிரித்த படியே வரவேற்றார்.

'கமலி, வந்துட்டாங்க. சீக்கிரம் வா' என்ற போது மனசுக்குள் புகைவண்டி ஓடுவது போல தடதடத்தது. அவள் முகம் காணும் பொழுதை மட்டுமே எதிர்பார்த்திருந்தேன். 'வாங்க.. வாங்க' என்றபடியே மாடியில் இருந்து வந்தாள் கமலி. ரெட்டை ஜடை, வெள்ளை ஜாக்கெட், பச்சை தாவணி என பள்ளிக்கூட கமலியை எதிர்பார்த்து வந்திருந்தது எவ்வளவு தப்பென்று இருந்தது. உருவம் பெருத்து, முடி நரைத்து, கண்ணாடி போட்டு ... காலம் மாறுவதை மனம் மறந்தே வந்தது புரிந்தது.

சிநேகத்துடன், 'நல்லா இருக்கீங்களா?' என்று மட்டும் முடித்துக்கொண்டேன். பிறகு நானும் செந்திலும் வரவேற்பறையில் பேச ஆரம்பித்தோம். குழந்தைகள் நால்வரும் ஏதோ அறையில் பேசிக்கொண்டிப்பது கேட்டது. வீட்டம்மாவும், கமலியும் சமயலறையில்.

என்ன ஒரு 45 நிமிடம் ஆகியிருக்குமா? 'என்னங்க சாப்பிடலாமா?' என்றபடியே கமலி அழைக்க, குழந்தைகளும் சேர்ந்துகொள்ள, உணவருந்தும் இடம், கலகலப்பாகியது.

(தொடரும்...)

# 5 கொலைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த நிகழ்ச்சி




சின்னத்திரை நிகழ்ச்சிகளில் குறைந்த காலத்தில் அசுர வளர்ச்சி அடைந்தது "சொல்வதெல்லாம் உண்மை" நிகழ்ச்சி. பிரச்சினைக்குரிய இரு தரப்பினரையும் அழைத்து பேச வைத்து தீர்வு காணும் நிகழ்ச்சி. முதலில் இதனை நிர்மலா பெரியசாமி தொகுத்து வழங்கினார். இப்போது நடிகை லட்சுமி ராமகிருஷ்ணன் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சி மூலம் இதுவரை மூடி மறைக்கப்பட்ட 5 கொலை குற்றங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுகுறித்து நிகழ்ச்சியின் தொகுப்பாளர் லட்சுமி ராமகிருஷ்ணன் கூறியிருப்பதாவது: சின்ன வயதில் வரும் பாலுணர்ச்சி காதல், திருமணத்துக்கு பிறகு உள்ள கள்ளத் தொடர்புகள் இவைதான் அதிகமாக வருகிறது. அவைகள்தான் கடைசியில் கொலையிலும் போய் முடிகிறது. தனிப்பட்ட மனிதர்களின் விஷயத்தை இப்படி பொது நிகழ்ச்சியில் விவாதிக்கலாமா? என்ற விமர்சனம் ஆரம்பத்தில் இருந்தது. நம்மோட பிரச்சினையை யாராவது கேட்க மாட்டாங்களான்னு ஆதங்கப்படுறவங்களுக்கான நிகழ்ச்சிதான் இது.

வருகிற இரண்டு தரப்பும் அவுங்க பக்கம் நியாயம் இருக்கிறதா நினைச்சிக்கிட்டுதான் வர்றாங்க. ஆனா நாங்க பண்ற கவுன்சிலிங்ல உண்மை வெளிவந்துவிடுகிறது. தன்னோட காதலுக்கு தடையா இருந்த அப்பா செய்த கொலையை ஒரு மகள் காட்டிக் கொடுத்தார், தன்னோட கள்ளக்காதலனுக்கு நடக்கப்போற கல்யாணத்தை தடுக்க வந்த பெண், தானும் கள்ளக்காதலனும் சேர்ந்து கணவனை கொலை செய்ததை சொல்லிவிட்டார். சிலர் குற்ற உணர்ச்சி தாங்கமால் உண்மையை சொல்லியிருக்காங்க. இதனால மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிவந்திருக்கு. பாதிக்கப்பட்டவங்களுக்கு தீர்வும் கிடைச்சிருக்கு என்கிறார் லட்சுமி ராமகிருஷ்ணன்.

# பாட்டி வைத்தியம்

**ஜலதோஷம் (தடிமன்)**

நாசி, நாசிக்குழல் என்னும் இவைகளில் இருக்கிற சளி உற்பத்தி செய்யும் ஜவ்வு வெப்பமடைந்தால் ஜலதோஷம் உண்டாகிறதென்றும் சுவாசக்குழலிலும் அதன் கிளைகளிலும் வெப்பம் உண்டானாலும் இருமல் உண்டாகிறது என்றும் சொல்கிறோம்

**மருந்து**

சுக்கு, மிளகு, சித்தரத்தை, அதிமதுரம் இவற்றை சமமாக எடுத்துக் கஷாயம் செய்து 3 வேளை உட்கொள்ள குணங்காணலாம்

50 கிராம் பணங்கற்கண்டை அரைப்படி நீரில் போட்டு அரைக்கால்படியாக வற்றவைத்து சூடு ஆறியபின் ஒரு எலுமிச்சம் பழத்தில் பாதியைப் பிழிந்து சாப்பிட ஜலதோஷம் நீங்கும்

மிளகை முலைப்பாலில் அரைத்து கொதிக்க வைத்துப் பத்துப் போட ஜலதோஷம் நீங்கும்

திருமதி.எஸ்.பாலசுந்தரம்
பூந்தோட்டம்






வவுனியா - பூந்தோட்டம்

அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயம்

வருடாந்த பொங்கல் விழா

28.06.2014 சனிக்கிழமை
வெகு விமர்சையாக
நடைபெறவுள்ளது

# சிம்புவினால் கைவிடப்பட்ட காதலிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் ஆர்யா

ஆர்யாவையை எடுத்துக் கொண்டால் இவருடன் கிசு கிசுக்கப்படாத நடிகைகளே இல்லை என சொல்லலாம். அந்த அளவிற்கு இவருக்கும் இவருடன் நடிக்கும் நடிகைகளும் நெருக்கம். பூஜா தொடங்கி அஞ்சலி வரைக்கும் அனைத்து நடிகைகளும் ஆர்யாவுடன் சேர்த்து வைத்துப் பேசப்பட்டனர்.

அந்தவகையில் காதல் மன்னன் ஆர்யாவுக்கும் லிட்டல் சூப்பர் ஸ்டார் சிம்புவுக்கும் என்ன ஒற்றுமை எனத் தெரியவில்லை. சிம்புவைக் காதலித்து அவரால் கழட்டி விடப்பட்ட நடிகைகள் அனைவரும் ஆர்யாவால் அடைகலம் பெறப்படுகின்றனர். ஆரம்பத்தில் சிம்புவை காதலித்து வந்தார் நயன்தாரா. இவர்கள் நெருக்கமாக இருந்த படங்கள் இவர்களது காதலை உறுதிப்படுத்தின. பிறகு சிம்புவை கை கழுவி விட்டு பிரபுதேவாவுடன் டூயட் பாட ஆரம்பித்து விட்டார் நயன். தன் காதலின் ஆழத்தை வெளிப்படுத்த பிரபுதேவாவின் பெயரை தனது கையில் பிரபு என பச்சைக் குத்தித் திரிந்தார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இவர்கள் பிரிய சிறிது நாட்களாக "சிங்களாக" இருந்த நயன் மீண்டும் ஆர்யாவுடன் கிசு கிசுக்கப்பட்டார். ஆனால் இவர்கள் இருவரும் நாங்கள் நல்ல நண்பர்கள் மட்டுமே என கூறி வந்தனர். இப்படி நயன்தாரா காதல் ஒரு புறம் இருக்க மறு புறமோ சிம்பு ஹன்சிகா திடீர் காதல் மலர்ந்தது. இவர்களது காதலை வெட்ட வெளிச்சமாக்கியதும் இவர்கள் நெருக்கமாக இருந்த படங்களே. திருமண பேச்சு வார்த்தை வரை சென்ற இவர்களது காதல், திடீர் புயல் வீச காற்றோடு காற்றாக மறைந்தது.

நயன் போல ஆர்யாவின் தோளில் டுவிட்டரில் நடிக்கும் உல்ல



"சிங்களாக" இருந்த ஹன்சிகா திடீர் என இவர் சாய்ந்தாற் போல படம் ஒன்றை தனது வெளியிட்டிருந்தார். இது இவர்கள் இருவரும் புது படத்திற்காக எடுக்கப்பட்டதா அல்லது ராசத்தின் போது எடுக்கப்பட்டதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஒரு வகையில் பார்த்தோமானால் சிம்புவின் காதலிருந்து பிரிந்த இவர்கள் எப்படி ஒற்றுமையாக ஆர்யாவின் மீது மோகம் கொள்கின்றனர் ? ஒருவேளை ஆர்யாவை அடைவதற்காகவே சிம்புவைக் கழட்டி விட்டனரோ? இல்லை சிம்புவால் கழட்டி விடப்பட்ட நடிகைகளுக்கு ஆர்யா அடைக்கலம் தர வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதோ? இல்லை.. ஆர்யாவும் சிம்புவும் நடத்தும் நாடகமோ?



# சினிமா



## வாய்ப்பிற்கு காத்திருக்கும் நடிகை

திரைப்படங்களில் சரியாக வாய்ப்புகள் அமையாத காலகட்டத்திலேயே தன்னை காதலித்த ராகுல் என் பவரை திருமணம் செய்து கொண்டு அமெரிக்காவில் செட்டிலானவர் நடிகை அபிராமி. சில ஆண்டுகள் இல்லற வாழ்க்கை, அதன்பின் அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய நிறுவனத்தில் மார்க்கெட்டிங் டைரக்டர். இப்படி சில ஆண்டுகள் ஓடிய பின்னால், மீண்டும் நடிக்க வேண்டும் என்று ஆர்வம் எழுந்திருக்கிறது. ஏற்கனவே கமலுக்கு ஜோடியாக 'விருமாண்டி' படத்தில் நடித்திருந்த நட்பின் காரணமாக 'விஸ்வரூபம்' படத்தில் நடிக்க கமல் கூப்பிடுவார் என்று நம்பிக் காத்திருந்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அத்தோடு அடிக்கடி அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு வந்து தெரிந்த பல இயக்குனர்களை அனுகி வாய்ப்பும் கேட்டுப் பார்த்தார். எதுவும் அமையவில்லை இதனால் மனம் வெறுத்துப் போன அபிராமி 'இனிமேல் சுற்றிப் பார்க்கக் கூட சென்னை பக்கம் வரமாட்டேன்' என்று தனது தோழிகளிடம் சொல்லி புலம்பி வருகிறார்.

## தனுஷை பாராட்டிய அமிதாப்



...து நடிகர் தனுஷ் இந்தி படமொன்றில் நடித்து
...ர். ராஞ்சனா படத்துக்குப் பின் இவர்
... இரண்டாவது படம் இது. இயக்குனர் பால்கி
...ருகிறார். பல்வேறு இந்தி நடிகர்கள் இதில்
..., பார்வையற்றவராக மிக முக்கியமான
... தனுஷ் நடிக்கிறார்.
... ஒவ்வொரு காட்சிகளும் சிறப்பாக
... என்பதற்காக பல நாட்கள் ரிகர்சல்
... அசத்தி வருகிறார் தனுஷ். இந்தப்
...னாரு முக்கிய கதாபாத்திரத்தில்
...ந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சன்,
...யும், அதற்காக
...ும் பார்த்து மிகவும்
...வர் மட்டுமல்லாமல் மற்ற நடிக,
...டையும் பெற்று வருகிறார்.
...க்கு ஒளிப்பதிவு செய்து வரும்
...கில் கிடைக்கும் ஓய்வ
...விதவிதமாக நிற்க வைத்து
...ருகிறாராம். அப்படி
...ய அளவில் பிரேம் போட்டு
...திருக்கிறார் தனுஷ்.

## கோச்சடையான்

### ஒரு கண்ணோட்டம்

சூப்பர் ஸ்டார் ரஜினியின் கோச்சடையான் ரசிகர்களுக்கு என்ன சொல்கின்றது என பார்ப்போம்

கோச்சடையான் தென் தமிழகத்தில் சங்க காலத்தை ஒட்டி ஆண்ட ஒரு தமிழ் மன்னனின் வீரமிக்க படைத் தளபதி. அவரது மகன் ராணா. அப்பாவுக்கு வீரம் மட்டுமே சொத்து என்றால் மகனுக்கு வீரமும், நடனமும் சொத்து.

முதல் பகுதியில் கோச்சடையானின் ஆதிக்கம் இருக்கும். ஆர்வ கோளாறினால் மகன் ராணா சில வீரதீர காரியங்களில் இறங்கி எதிரிகளிடம் மாட்டிக்கொள்ள அவரை தனி ஆளாக எதிரியின் கோட்டைக்குள் சென்று கோச்சடையான் மீட்கும் காட்சியில் அனல் பறக்கும். எதிரிகளால் தந்தை கோச்சடையான் கொல்லப்பட தளபதி பொறுப்புக்கு வரும் ராணா ஆடும் ஆக்ஷன் ஆட்டம்தான் படத்தின் இரண்டாம் பகுதி.

கோச்சடையான் ஜோடியாக ஷோபனா, ராணா ஜோடியாக தீபிகா படுகோனே. ராணாவின் டான்ஸ் மாஸ்டராக ருக்மணி. கோச்சடையானின் நண்பராக சரத்குமார், ராணாவின் நண்பராக ஆதி. வில்லன் ஜாக்கி ஷெராப். ராஜகுரு நாசர்.

ஷோபனாவுக்கும், ராணாவுக்கும் நடக்கும் போட்டி நடனம் அரங்கத்தை அதிர வைக்கும்.

படத்தின் ஆடை வடிவமைப்பு பொறுப்பை தேசிய விருது பெற்ற நீத்தாலுல்லு செய்திருக்கிறார். தமிழ் நாட்டின் பண்டைய ஆடைகளை கோவில் சிலைகளில் இருந்து படியெடுத்து வரைந்து கொடுத்திருக்கிறார். அதனையே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் 6 பாடல்கள் இடம்பெறுகிறது. அதில் ஒன்று "எதிரிகள் இல்லை..." என்ற ரத்தத்தை சூடேற்றும் யுத்த பாடல். வைரமுத்துவின் பாடலை தமிழ், தெலுங்கில் பாடியிருப்பவர் ரஜினி. இந்தி படத்தில் பாடியிருப்பவர் ஏ.ஆர்.ரகுமான்.

தமிழ் தெலுங்கு இரண்டிற்குமே ரஜினி டப்பிங் பேசியிருக்கிறார்.

படம் ஓடும் நேரம் 125 நிமிடங்கள். இண்டர்வெல் கிடையாது

# திவ்யா ஒரு கேள்விக்குறியா?

3


(குடும்பத் தொடர்...)

போதுமான வருமானம் எனக்கென்னக்கா குறை இதைவிட வேற என்ன வேணும் நான் சந்தோஷமாய்த்தான் இருக்கிறன் வேணுமென்றால் வீட்ட வந்து பாருங்கோவன். திவ்வியா யசோக்காவிற்கு பொய்யை பொரிந்து தள்ளினாள் எனினும் அவளை ஏமாற்றியதை நினைத்து வேதனை அடைந்ததுடன் கதையை அவள் பக்கம் திசை திருப்பினாள்.ட

சரியக்கா நீங்கள் இப்ப என்ன செய்யிறீங்கள்? திவ்வியா நான் திண்ணைவேலி கம்பஸில் லெக்ஸரராக இருக்கிறன் இங்க றூம் எடுத்துத்தான் இருக்கிறன் இந்தா இதுதான் என்ர அட்ரஸ். நீ எப்பவேணுமென்றாலும் என் றூமுக்கு வரலாம். சரி உன்ர அட்ரஸ தா, நான் லீவு கிடைக்கும் போது உங்கட வீட்ட வாறன் என்று கூற திவ்வியாவும் அட்ரஸ எழுதி கொடுத்தாள்.

நாட்கள் வாரங்களாக வாரங்கள் மாதங்களாகிக்கொண்டிருந்தன. அசோக்கும் திருந்தினபாடாக இலிலை. இருவருக்கும் இடையில் விரிசல் அதிகரித்துக் கொண்டே போனது. எடுத்ததெற்கெல்லாம் எரிந்து விழுந்தான். காரணமே இல்லாமல் சண்டையிட்டான். குடிப்பதற்காக அடித்தான். அடிப்பதற்காகக் குடித்தான். சட்டிபானை உடைத்தான் வீட்டைக் கொழுத்தினான். விரட்டி விரட்டி அடிந்தான். திவ்வியா எல்லாவற்றையும் பொறுத்தாள். பொறுக்க முடியாத கட்டத்தில் தற்கொலை செய்யத் துணிந்தாள். இந்நிலையிலும் தப்பித்துக்கொண்டாள்.

இது இவ்வாறிருக்க ஒருநாள் யசோதா திவ்வியாவைப் பார்க்க போய்க் கொண் டிருக்கி றாள் திடீரென வெளிக்கிட்டபடியினால் முன்னறிவித்தல் கொடுக்கவில்லை அதேநேரம் தீடீரெனப் போய் நின்று அவளை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள். ஒருவாறு அவளது வீட்டைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு கேற்றைத் திறக்கின்றாள். “ஐயோ அம்மா என்னை அடிக்காதீங்கோ உங்கள கும்பிடுறன். என்ன அடிக்காதீங்கோ ஐயோ ஐயோ அம்மா அம்மா” அழுகுரல் யசோதா விக்கித்துப்போகின்றாள். விரைவாகச் சென்று வீட்டின் முன் நிற்கின்றாள். அசோக் திவ்வியாவைப் போட்டு அடித்துக் கொண்டிருக்கிறான். மூன்று வயதுப் பிள்ளை மூலைக்குள் இருந்து அழுதுகொண்டிருக்கின்றது.




யசோதாவால் நம்பமுடியவில்லை. திவ்வியா அன்று சொன்னதெல்லாம் பொய்யா? கண்கலங்காமல் பார்க்கிறான் என்று சொன்னாளே இங்கே கதறக்கதறவல்லவா அடிக்கிறான். இத்தனை துன்பங்களையும் துயரங்களையும் வைத்துக்கொண்டா என்னுடன் சிரித்துச் சிரித்துப்பேசினாள். மனசு வெம்பி வெடித்தது. திவ்வியா யசோதாவைக் கண்டு விடுகிறாள் குலைந்த தலையும் கிழிந்த உடையும் ரத்தமும் கண்ணீரும் வழிந்தோட “யசோக்கா” என்று ஓடி வருகிறாள். அக்கா என்ன மன்னிச்சிடுங்கோ. அன்டைக்கு உங்களுக்கு நான் பொய்தான் சொன்னனான் என்ர கௌரவத்திற்காக வந்தநாள் தொடக்கம் இதுதானக்கா என்ர நிலை. நிம்மதியுமில்லை, சந்தோசமுமில்லை, நான் சந்தோஷமாக சிரித்து எத்தனையோ வருசமாகிற்று. திவ்வியா விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கின்றாள். யசோதா அவளின் தலையை தடவிக்கொண்டே அழாதேம்மா அழாதேம்மா என்ன நடந்தது? என்று கேட்கிறாள். காரணமே இல்லாமல் அடிக்கிறாரா அக்கா, காரணத்தை கேட்டால் காரணம் உனக்கு சொல்லோனுமாடி என்று அடிக்கிறாரக்கா அ ப்ப ஊராக்கள் வந்து மறிக்கிறதில்லையா? முந்தி நெடுக வந்து மறிப்பினம். இப்ப வழமைதானே என்டு வராமல் விட்டிட்டினம். அ ப்ப என்ன செய்யப்போறாய் நான் என்னக்கா செய்யிறது. எனக்கு யார் இருக்கினம் ஆறுதல் தாறதிற்கு. அம்மா அப்பா சகோதரம் எல்லாருமே என்னில வெறுப்பு நான் எங்க போவன் அதனாலதான் செத்துப்போவம் எண்டு நினைக்கிறனான். இந்தப் பிள்ளையத்தான் நினைச்சுப் பாக்கிறன். இந்தப் பிள்ளைக்காகத்தான் நான் உயிரோட இருக்கிறன். இல்லையென்றால் எப்பவோ செத்திருப்பன் அதனாலதான் அடி உதை வாங்கியே

தொடரும்...

பிரியநிலா
ஓமந்தை

# முயன்றால் முடியும்! 17



**இடமிருந்து வலம்**

1. விலங்குகளில் மிக உயரமானது
4. அளவுக்கதிகமாக பேசும் பெண்கள்
5.இஸ்லாமியரின் வணக்கஸ்டதலம்
7.மன்னர்கள் வைத்திருப்பதும் மரம்வெட்டஉதவுவதும்
8.இது ஏற முழம் சறுக்கும் (திரும்பி)
9. பண்டைக்காலத்திலிருந்து இன்றுவரை செய்தியை அனுப்பும் முறைகளில் ஒன்று (திரும்பி)
10. ஒரு மனிதன் வேலைசெய்ததற்கு கிடைப்பது (குழம்பி)
11. காட்டில் வளரும் மிருகம் வீட்டிலும் வளர்ப்பர் (குழம்பி)
12. ஆடம்பரம்
14.யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்று
17.பிள்ளையாருக்குப் பிடித்தமான புல்லு (குழம்பி)

**மேலிருந்து கீழ்**

2. குதிரைக்குப் போடுவது
3. கிராமிய விளையாட்டுகளில் ஒன்று
6. சகா
8. எரித்தால் இறுதியில் எஞ்சுவது
10. பாஞ்சாலி எடுத்தது
13.பசுவின் பிள்ளை
15.சிம்பு கதாநாயகனாக நடித்த படங்களில் ஒன்று
16.அரசன்

விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1அ | ந் | 2த | ப் | 3பு | ர | ம் | | 4த | டி |
| ரி | | வ | | த் | | ய | | றி | |
| சி | | ம் | ர | த | ந் | 5கு | | | 6லி |
| | | | | க | | | 7ஆ | ர | பி |
| 8ச | ந் | 9தோ | ஷ | ம் | | 10அ | | | யா |
| | | ப் | | | டி | ணா | ண் | 11க | |
| 12ச | ம் | பா | ஷ | ணை | | | | ற் | |
| | | கா | | | ம் | 13வ | ர் | பூ | 14அ |
| 15இ | ட | து | சா | ரி | | ச | | 16ர | வை |
| லை | 17வ | | | | 18அ | தி | க | ம் | |

சென்ற மாதத்திற்கான சரியான பதிலை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள் பணப்பரிசை பெறுகின்றார்கள்

**500/-** கார்த்திகாஜினி–சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்

**300/-** ச.கௌரிதரன் – பெரியார்குளம், பூந்தோட்டம், வவுனியா.

**200/-** நிமல்ராஜ் – இல:30, பிரதான வீதி, ஓமந்தை, வவுனியா

**முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகள்**


கபில்தேவ் – இல: 02, பூந்தோட்டம், வவுனியா.

ஞானப்பிரகாசம் – 3ம் ஒழுங்கை, கோவில்புதுக்குளம், வவுனியா.

இதயராணி – செட்டிக்குளம், மெனிக்பாம், வவுனியா.

திலகரட்ணம் – இல:12, அரியாலை, யாழ்ப்பாணம்.

காவ்யா – இல: 123/2, கரியாலை நாகபடுவான்.



# என் உயிர்ப் பாடல்

## நெஞ்சம் ஒருமுறை நீ என்றது...

படம் : வசீகரா (2003)
இசை : எஸ்.ஏ.ராஜ்குமார்
பாடலாசிரியர்: பா.விஜய்
பாடியவர் : ஸ்ரீனிவாஸ், மகாலெட்சுமி ஐயர்

நெஞ்சம் ஒரு முறை நீ என்றது
கண்கள் ஒரு நொடி பார் என்றது

நெஞ்சம் ஒரு முறை நீ என்றது
கண்கள் ஒரு நொடி பார் என்றது
ரெண்டு கரங்களும் சேர் என்றது
உள்ளம் உனக்குத்தான் என்றது
சத்தமின்றி உதடுகளோ முத்தம் எனக்கு தா என்றது
உள்ளம் என்ற கதவுகளோ உள்ளே உன்னை வா என்றது

நீதான் நீதான் எந்தன் உள்ளம் திறந்து
உள்ளே உள்ளே வந்த முதல் வெளிச்சம்
நீதான் நீதான் எந்தன் உயிர் கலந்து
நெஞ்சை நெஞ்சை தொட்ட முதல் ஸ்வரிசம்
கன்னம் என்னும் தீ அணைப்பு துரையில்
உன் முத்தம்தானே பற்றி கொண்ட முதல் தீ
கிள்ளும்போது எந்தன் கையில் கிடைத்த
உன் விரல்தானே நானும் தொட்ட முதல் பூ
உன் பார்வைதானா எந்தன் நெஞ்சில் முதல் சரணம்
அன்பே என்றும் நீ அல்லவா
கண்ணால் பேசும் முதல் கவிதை
காலமுள்ள காலம் வரை
நீதான் எந்தன் முதல் குழந்தை
(நெஞ்சம்..)

காதல் என்றால் அது பூவின் வடிவம்
ஆனால் உள்ளே அது தீயின் உருவம்
காதல் வந்தால் இந்த பூமி நழுவும்
பத்தாம் கிரகம் ஒன்று பாகம் பறவும்
காதல் வந்து நெஞ்சுக்குள்ளே நுழையும்
ஒரு தற்பவெப்ப மாற்றங்களும் நிகழும்
காதல் வந்து கண்ணை தொட்டு எழுப்பும்
அது ஊசி ஒன்னை உள்ளுக்குள்ளே அனுப்பும்
இந்த காதல் வந்தால் இலை கூட மாலை சுமக்கும்
காதல் என்ற வார்த்தையிலே
ஒன்றாய் சேர்ந்து நாம் தொலைவோம்
காதல் என்ற வார்த்தையிலே
ஒன்றாய் சேர்ந்து நாம் தொலைவோம்
காதல் என்ற காற்றினிலே
தூசி போல நாம் அலைவோம்
(நெஞ்சம்..)

எஸ்.ஏ.ராஜ்குமாரின் தேன் இசையில் இதுவும் ஒன்று கேட்பதற்கு மிக இனிமையான பாடல். அதுமட்டுமல்ல ஸ்ரீனிவாஸின் குரலும் இனிமை எத்தனைமுறை கேட்டாலும் அலுக்காது. எனக்காக இந்தப் பாடலை தாருங்கள்


**இ.காவ்யா**
நெளுக்குளம், வவுனியா.

# உங்கள் ராசிக்கு காதல் உறவுகள் எவ்வகையில் அமையும்



## விருச்சிகம்

விருட்சிக ராசிக்காரர்கள் காதலை விரும்புவர். தான் காதலிப்பதை விட, தன்னை காதலிப்பதையே அதிகம் விரும்புவர். தான் பழகுபவர்களிடல் உள்ள எல்லா நல்ல குணத்தையும் கற்றுக் கொண்டு ஒரு சிறந்த மனிதராக இருப்பார். பெண்களை பார்ப்பதை விட, பெண்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்று எண்ணுவதால் இவருக்கு காதல் என்பது எட்டாத கனியாகும். இவர்களது வயது ஆக ஆக காதல் எண்ணம் அதிகரிக்கும். தன்னையே விரும்புபவராகவும், ஒரு சில நேரங்களில் தன்னையே வெறுப்பராகவும் இருப்பார்.எப்போதும் உற்சாகமாக இருப்பார். காதல் மற்றும் தாம்பத்ய வாழ்க்கையை முற்றும் உணர்ந்தவராக வாழ்வார். இளமை பருவத்தில் சிறிது தடுமாறினாலும், தனது ஆழ்ந்த சிந்தனையால் தடுமாற்றத்தில் இருந்து விடுபடுவார். துணையை சந்தேகிக்கும் குணம் இருக்கும். இவர்கள் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாகவும், அமைதியாக வும் இருப்பர்.



# Face Book ல்

## சிங்கத்திடம் சிக்கியது மான்.

செல்வநாயகம் கஜந்தினி
சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.

யாரையும் காதலிக்கிறியா?

கவி – இருக்கின்றேன். நிஷாந் நான் யாரையும் காதலிக்கவில்லை.

நிஷாந் – ம். அப்படி ஏதும் Idea இருக்கின்றதா?

கவி – உங்களுக்கு என்ன வேண்டும்? நல்லாத்தானே கதைத்துக் கொண்டிருந்திங்கள். என்ன நடந்தது? எந்த நேரமும் காதல், காதல், காதல், காதல் தான்.

நிஷாந் – ம். அப்படித்தான். உன்னோடு கதைக்க எல்லாமே என் நிமிடங்கள் அனைத்தும் மாறிப்போகின்றது.

கவி – மன்னிச்சிருங்க நிஷாந் என்ன தப்பா புரிஞ்சிற்றிங்கள். எனக்கு Love ல நம்பிக்கை இல்லை. Bye நிஷாந் நான் பிறகு கதைக்கிறன்.

இப்படி சொல்லி முகஅட்டையில் இருந்து வெளியேறி விட்டாள். அவன் ஒரு காமுகன் என்று சிந்திக்காத கவி நிஷாந் கதைத்ததை அத்தோடு அவன் அன்பு காட்டிய விதம் என்று பல விடயங்களை சிந்தித்தாள். மறுநாள் அவள் முகஅட்டையை (Face book) பார்க்கச் சென்றாள். அப்போதும் அவன் அங்கு காத்திருந்தான். முதல் நாள் அவள் போனதற்கு பிறகு அவளிற்கு குறுந்தகவல் சில அனுப்பியிருந்தான்.

நிஷாந் – ஐ லவ் யு கவி.

கவி மனதில் பட்டதை சொல்லிவிட்டேன். தப்பா நினைக்காதேங்க. உன் அன்பு எனக்கு ஆயுள் முழுக்க வேண்டும் கவி.

இதனை வாசித்துப் பார்த்து அதிர்ந்து போனாள் கவி. அன்று போல் மறுநாளும் தெடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்தான். கவியோ இரண்டு நாட்கள் எந்தப் பதிலும் அனுப்பவில்லை. நிஷாந் தன்னைப் பற்றியும் தன் காதலைப் பற்றியும் கூறி நல்லவன் போல் நடித்து கவியின் மனதில் இடம் பிடித்தான்.

சிங்கத்திடம் சிக்கிக் கொண்டது இளமான் ஒன்று. மீண்டும் முகஅட்டைப் பக்கம் சென்ற கவி நிஷாந்தோடு மிக அன்பாக உரையாடினாள்.

கவி – நிஷாந் எனக்கு உங்களப் பிடிச்சிருக்கு.

நிஷாந் என் காதல் எப்பொழுதும் உண்மையானதாக இருக்கும். நீ எப்பவும் என்னை விட்டுப் பிரியக் கூடாது.

நல்லவனா இருந்து என்னைப் புரிந்து Love பண்ணுங்கோ நிஷாந்.

என்று பல அறிவுரைகளை அன்பாக கூறினாள். "ம்" என்று தலையாட்டிய கயவனின் மறுமுகம் காதல் கூறி அவள் உரையாடிய மூன்றாவது நாள் விளங்கியது. இவளது மிக நெருங்கிய நண்பி "சிமோ" என்ற ஒரு பெண் அவளும் இவளைப் போலவே படிப்பு, விளையாட்டு என்று எல்லாவற்றிலும் கெட்டிக்காரி அவளையும் நிஷாந் காதலித்து ஏமாற்றியிருக்கின்றான். என்பதை அவள் நண்பி மூலம் அறிந்து கொண்டாள். அதுமட்டுமன்றி, அவனைப் பற்றிய பல விடயங்கள் கவிக்கு தெரியவர தடுமாறிப் போனாள். "கவி தன்னை உயிருக்குயிராக நேசிப்பதாகவும் அவளையும் ஒருநாள் ஏமாற்றுவேன் அவளுக்கும் ஒருநாள் இந்நிலை தான்" என்று நிஷாந் சிமோக்கு கூறியிருப்பதாக சிமோ கவியிடம் சொன்னாள். இதனைக் கேட்ட கவி தடுமாறினாள். அப்போதுதான் கவி சிமோவோடு தொலைபேசியில் உரையாடினாள்.

சிமோ – கலோ...... கவி என்னடி செய்கிறாய்? எப்படி சுகம்? எவ்வளவு காலம் பார்த்து. (என்றாள்)

கவி – ஏதோ இருக்கிறேன். நல்லா இருந்த என் வாழ்க்கைக்கு ஏதோ பெரிய இடி விழுந்த மாதிரி இருக்கின்றது.

சிமோ – கவி அதையே நினைச்சு மனசக்குழப்பாத நான் இருக்கிறேன். Ok என்னோட கதைக்கிறதா அவனிட்ட சொல்ல வேண்டாம்.

கவி நிஷாந் ஒரு சுயநலவாதி. அவன் என்னை விரும்பினதா நடிச்சிருக்கிறான். இப்படி என்னை விரும்ப முதல் இன்னொரு பெண்ணை காதலித்து உடலுறவும் கொண்டு இப்ப அவளையும் தெருவுக்கு கொண்டு வந்திற்றான். இவன் வாழ்வில் கவி பெண்கள் எல்லாம் சுகத்திற்காக மட்டும்தான் பயன்படுத்துவான்.

கவி – ம், சிமோ நீ சொல்லாவிட்டால் எனக்கு எதுவும் தெரிந்திருக்காது. நன்றி சிமோ.

சிமோ – நன்றி எல்லாம் எனக்கு சொல்லாதடி. அவன்

(தொடரும்...)

# மாணவர் அரங்கம்


தயாணி பரமலிங்கம்
மாணவர் இல: 01


சலோமி
மாணவர் இல: 02


சிபியா
மாணவர் இல: 03


பே.போனுயன்
மாணவர் இல: 04


ற.அபிதா
மாணவர் இல: 05


ற.அனோஜினி
மாணவர் இல: 06


கீ.கலையரசி
மாணவர் இல: 07


க.கயலரசி
மாணவர் இல: 08


ஜீ.சான்சியா
மாணவர் இல: 09


ந.டேனுஜன்
மாணவர் இல: 10


உ.கனிமாறன்
மாணவர் இல: 11


உ.கனிநிலவன்
மாணவர் இல: 12


மா.கயலக்ஸி
மாணவர் இல: 13


ந.சாலினி
மாணவர் இல: 14


சி.டனுஸ்கரன்
மாணவர் இல: 15


ர.நிரோஜினி
மாணவர் இல: 16


ச.பிரதீபன்
மாணவர் இல: 17


வீ.சஜானா
மாணவர் இல: 18


ஞா.துஷ்யந்தன்
மாணவர் இல: 19


ந.தனுசன்
மாணவர் இல: 20


க.கஜீவா
மாணவர் இல: 21


ம.விதுசா
மாணவர் இல: 22


ந.நவயதுர்சன்
மாணவர் இல:23


த.பிரியங்கா
மாணவர் இல: 24


ச.மேரிபிரிசதர்சினி
மாணவர் இல:25


த.தனுஸ்ரன்
மாணவர் இல: 26


ச.சஞ்சை
மாணவர் இல: 27


ம.மதுமிதா
மாணவர் இல: 28


ற.ஜஸ்மி
மாணவர் இல: 29


ஜெ.கலைப்பிரியா
மாணவர் இல: 30


# சிதைந்த கனவுகள்


– சிறுகதை

■ கூடலூர் ச.அ.இராசநாயகம்

. இப்போ வயது நாற்பத்தைந்து கடக்கும் அன்பரசி கோகுலனின் பராமரிப்பில் இருந்தாள். ஒருநாள் அன்பரசியின் நண்பி சரசு அவளைச் சந்தித்தாள். பாலனின் தற்போதைய நிலைமையையும் அவனது கோலத்தையும் மீனா பாலனோடு ஓடி மூன்றாவது வருடமே மீனாவை அவளது கணவன் வெளிநாட்டுக்கு எடுத்து விட்டதையும் அதன் பின்பு பாலன் அநாதையாக உள்ளான் என்பதையும் அன்பரசியிடம் சொல்லி அவனை மன்னித்து சேர்த்துக்கொள்ளும்படி கேட்டாள். ஆனால் விரக்தியுடன் சிரித்த அன்பரசி சொன்னாள் "இந்த பதினைந்து வருஷத்துக்குள்ளும் உன்னை மாதிரி எத்தனையோ பேர் வந்து கேட்டுவிட்டார்கள். சரசு உனக்கு ஒன்று மட்டும் சொல்லுறன். காலம் கடந்த ஞானம் எதற்கும் பிரயோசனம் அற்றது. எனது காலம் போய்விட்டது. இப்போது பிள்ளைகளின் பராமரிப்பில்தான் இருக்கிறேன். நான் சபதம் போட்டால் போட்டதுதான். என்றைக்குமே மன்னிப்பு கிடையாது" என உறுதியாய் சொல்லி விட்டு திரும்பியபோதுதான் வீட்டுப் படலைக்கு வெளியெ பாலன் நின்றுக் கொண்டிருப்பதை கண்ணுற்றாள். கண்கள் நெருப்பு பொறி கக்க சரசுவைப் பார்த்த அன்பரசி கொதிப்போடு கத்தினாள். "எந்த முகத்தை கொண்டு இங்க வந்தனி. இது என்ன சத்திரமா? நீ தங்கித் தங்கி போறதுக்கு பிள்ளைகளை நீ வளர்க்கிறதுக்குப் பதிலாக நான் மாடாய் கஷ்டப்பட்டு வளர்த்தன். இப்ப எல்லாம் முடிஞ்சு போச்சு. போ இன்னும் ஒரு நிமிசமும் நிற்கக் கூடாது போ. மகன் வந்தால் கொண்டே போடுவான் போ" இடியாய் விழுந்த சத்தத்தினால் கலங்கிய சரசு பாலனுக்கு சைகை காட்டி விட்டு வெளியேறினாள். முடிவெட்டி, சேவ் எடுத்து நல்ல உடையுடன் வந்திருந்த பாலன் பெரும் ஏமாற்றத்துடன் வெட்கமாய் தனது பழைய பஸ் தரிப்பிடம் நோக்கி நடந்தான்.

(முற்றும்)





**மு/சிலாவத்தை தமிழ்வித்தியாலயம் சுற்றாடல் முன்னோடி விருதுவழங்கும் விழா - 2014**

"சுற்றாடல் முன்னோடிப்பதக்கம்" பெற்ற மாணவர்கள் நடுவில் பொறுப்பாசிரியர் ம.மயூதரன் இடமிருந்து வலமாக விவசாய ஆசிரியர் P.சிவகணேசன், கோட்ட ஆணையாளர் S.விஜயரட்ணம் அதிபர் K.திருக்குமரன் சுற்றாடல் உத்தியோகத்தர் S.இலங்கேஸ்வரன், J.விஜயதர்சன்

## உங்கள் கை வண்ணங்கள்

மாதநிலா செல்வங்களே, நீங்கள் வரைந்த ஓவியங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் "உங்கள் கைவண்ணங்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும்.

**உமாபரன் - கனிநிலவன்**
தரம்: 6,
கிளி/கரியாலை நாகபடுவான்
அ.த.க.பாடசாலை




**Job Bank**

வேலைவாய்ப்பு தருனர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

### வேலைவாய்ப்பு

- முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள பிரபல புகைப்படக்கலையகத்திற்கு டிசைனிங் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண்,பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றார்கள். 0212290025 / 0775298352

**பதவி வெற்றிடம்** (வவுனியாவில்)

பிரபல தொழில்சார் கல்லூரிக்கு கணனி அறிவு மற்றும் ஆங்கில அறிவுடன் கூடிய
**நிர்வாக உத்தியோகத்தர் (பெண்)**
தேவை
சம்பளம் நேரில் பேசித் தீர்மாணிக்கப்படும்
077 9713221

வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குத் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா?
மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை கற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?

**உடன் தொடர்பு கொண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்**

**எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**

அழையுங்கள் **077 900 94 91**

**கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் வழங்கும் பரிசுக்குவியல் பகுதியில் மே மாதத்திற்கான போட்டியில் குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள்.**


1 சுவேந்திரன் சாமினி (கரியாலை நாகபடுவான்)

2




2ம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் இரத்தினேஸ்வரன் அவர்களுக்கு (இல:100, பஸ்நிலையம் மேல்மாடி வவுனியா) கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளர் திரு.இ.கிரிதரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்

3



3ம் இடத்தைப் பெற்ற போட்டியாளர் எஸ்.சுதாஜினி அவர்களுக்கு (புதிய குடியிருப்பு, பரசங்குளம் புளியங்குளம்) கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் உரிமையாளர் திரு.இ.கிரிதரன் அவர்கள் பரிசை வழங்கி கௌரவிக்கின்றார்



மு.முரளிதரன் 74, காத்தான்கோட்டம், நெளுக்குளம், வவுனியா.




T.யுஜிந்தா (பாலவிநாயகர் வீதி, தவசிகுளம், வவுனியா)



வெள்ளையன் சுபாஜினி (இல:43, செல்வாநகர், வவுனியா)



வீரகுமார் நிதுசன் (புதிய குடியிருப்பு, பரசங்குளம், புளியங்குளம்)



எஸ்.ஜக்ஷனா (புதிய குடியிருப்பு, பரசங்குளம், வவுனியா.)



செல்வன்.தனுஸ்காந் 219A, சுந்தரபுரம், வவுனியா

# ஒரு கல்லூரி மாணவி தான் சாகப்போவதாக தொலைபேசியில் கூறிவிட்டு கடலில் குதித்தார்

சாகப் போவதாக செல்போனில் தகவல் சொல்லிவிட்டு, கல்லூரி மாணவி ஒருவர் மெரினா கடலில் குதித்துவிட்டார். அந்த கல்லூரி மாணவியை அவரது காதலன், கடலில் மூழ்கி சாகவிடாமல் தடுத்து காப்பாற்றினார். முடிவில் காதலனை, அந்த மாணவி நேற்று மணந்து கொண்டார்.

கல்லூரி வாசலில் மலர்ந்த காதல்

சாகத்துணிந்த அந்த கல்லூரி மாணவியின் பெயர் ராதிகா (வயது 21), சென்னை தேனாம்பேட்டையில் வசிக்கும் ஒரு முக்கிய புள்ளியின் மகள். தேனாம்பேட்டையில் உள்ள பெண்கள் கல்லூரியில் படிக்கிறார். தினமும் கல்லூரிக்கு வரும்போது, கல்லூரி வாசலில் உள்ள ஏ.சி. மெக்கானிக் கடையில் வேலைபார்த்த சார்லஸ் (வயது 27) என்ற ஏழை வாலிபரிடம், அந்த மாணவி மனதை பறிகொடுத்துவிட்டார். சாதி, மதம், வசதி, வாய்ப்பு எதையும் பார்க்காமல், மனதை, அந்த வாலிபரின் மனதோடு இணைய விட்டுவிட்டார்.

இந்த காதல் விவகாரம் தெரிந்து, மாணவியின் பெற்றோர், மாணவியின் படிப்பை நிறுத்தி வீட்டில் சிறை வைத்துவிட்டனர்.

அந்த மாணவி, தன்னை அடைத்து வைத்த அறைக்கதவை உடைத்துக்கொண்டு தப்பி வந்து காதலனுக்கு போன் செய்தார். நான் மெரினா கடலில் குதித்து சாகப்போகிறேன், முடிந்தால் என்னை காப்பாற்றி, கைப்பிடித்து, அழைத்து செல், என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டார்.

கடலில் குதித்தார்

காதலியிடம் இருந்து வந்த இந்த அதிரடி அழைப்பால், ஆடிப்போன காதலன், உடனடியாக மெரினாவுக்கு ஓடினார். ஆனால் அதற்குள் மாணவி கடலில் குதித்துவிட்டார்.

அலையில் தத்தளித்து, உயிருக்கு போராடியபடி கிடந்த மாணவியை, காதலன் சார்லஸ் பாய்ந்து சென்று கடலில் குதித்து காப்பாற்றிவிட்டார். காப்பாற்றி கரை சேர்த்த அவரால், மாணவியின் கைப்பிடித்து வாழ்க்கை கொடுக்க முடியவில்லை. காரணம், மாணவியின் பெற்றோர் விடுத்த மிரட்டல். ஒருபக்கம் மிரட்டல், இன்னொரு பக்கம் அடுத்து என்ன செய்வதென்ற தவிப்பு.

காதல் ஜோடி சென்னையில் நேற்று முன்தினம் ஆட்டோவில் சுற்றிக்கொண்டே இருந்தார்கள். மாணவியின் பெற்றோர், போலீஸ் துணையோடு தேடிக்கொண்டிருந்தார்கள். உயிரை கையில் பிடித்துக்கொண்டு ஒளிந்து அலைந்த அந்த காதல் ஜோடிக்கு நேற்றைய பொழுது நல்லபடியாக விடிந்தது.

கமிஷனர் அலுவலகத்தில் தஞ்சம்

நேற்று பகலில், பெண் வக்கீல் சாந்தி உதவியுடன், காதல் ஜோடி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் தஞ்சம் அடைந்தனர். மாணவியின் பெற்றோர் ஏற்கனவே, தேனாம்பேட்டை போலீசில் புகார் கொடுத்திருந்தனர். இதனால் தேனாம்பேட்டை இன்ஸ்பெக்டர் சரவணன், கமிஷனர் அலுவலகம் வந்து காதல் ஜோடியை அழைத்துச் சென்றார்.

காதல் ஜெயித்தது

தேனாம்பேட்டை போலீஸ் நிலையத்தில் காதல் ஜோடியிடம் விசாரணை நடந்தது. மாணவியின் பெற்றோரும் அங்கு இருந்தனர். ஆனால் அவர்களை மாணவி எட்டிக்கூட பார்க்கவில்லை.

நான் எனது காதலரை, திருவேற்காடு கோவிலில் வைத்து திருமணம் செய்துகொண்டேன், என்னை எனது கணவரோடு, சேர்ந்து வாழவிடுங்கள், என்று மாணவி ராதிகா, உறுதியுடன் கூறினார்.

இதனால் போலீசார், மாணவி ராதிகாவை, அவரது காதல் கணவர் சார்லசுடன் அனுப்பி வைத்தனர். மாணவியின் பெற்றோர், கண்ணீர் விட்டபடி, போலீஸ் நிலையத்திலிருந்து சென்றனர். காதல் ஜெயித்தது, பெற்றோரின் பாசம் தோற்றது, என்று போலீசார் தெரிவித்தனர்.

## பொது அறிவு

1.நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கான மக்கள் எயிட்ஸ் நோயினால் மரணிக்கும் நாடு எது?

தென்னாபிரிக்கா

2.சர்வதேச கோட்டுக்கு அண்மையிலுள்ள நாடு எது?

அலூஷியன் தீவுகள்

3.நோபல் பரிசு வழங்கப்படாத துறை எது?

கணிதம்

4. உலக மொழிகளின் தாய் எது?

சமஸ்கிருதம்

சத்தியதாஸன் திவாகரன்
ஆண்டு - 05
நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம்
ஆவரங்கால்

# அனைவருக்கும் ஆங்கிலம் 10

## Have \ Have got

நாம் ஏற்கெனவே Grammar Patterns 1, 2, 3 களில் ஒரு (Verb) வினைச்சொல்லை 73 வ்று விதமாக மாற்றி பயிற்சி செய்தோம். Grammar Patterns 4 கில் ஒரு பெயர்ச்சொல்லை (Noun) 32 விதமாக மாற்றியும் பயிற்சி செய்தோம்.

இன்றைய "கிரமர் பெட்டர்ன்" சற்று வித்தியாசமானது. அதாவது "இருக்கிறது" (have) எனும் சொல்லை மையமாகக்கொண்டே இன்றைய "கிரமர் பெட்டனை" நாம் வடிவமைத்துள்ளோம்.

Have எனும் சொல்லின் தமிழ் அர்த்தம் "இருக்கிறது" என்பதாகும். உதாரணமாக "I have work." எனும் வாக்கியத்தை தமிழில் மொழிப்பெயர்த்தால் "எனக்கு இருக்கிறது வேலை" என்று வரும். இந்த வார்த்தையை "எனக்கு இருக்கிறது வேலை, இருந்தது, இருக்கலாம், இருக்கும், இருந்திருக்கும், இருந்திருக்கலாம்" என 23 வாக்கியங்களாக மாற்றி இன்று பயிற்சி செய்யப் போகின்றோம்.

நாம் ஏற்கெனவே பயிற்சி செய்த மற்ற Grammar Patterns களைப் போல் இந்த கிரமர் பெட்டர்னையும் வாய்ப்பாடு பாடமாக்குவதைப் போன்று மனப்பாடம் செய்துக்கொள்ளுங்கள். நீங்கள் புதிதாக இந்த "ஆங்கிலம்" தளத்திற்கு வருகைத் தந்தவரானால், Grammar Patterns 1 லிருந்தே உங்கள் பயிற்சிகளை தொடரும்படி கேட்டுக்கொள்கின்றோம். அதுவே இப்பாடப் பயிற்சியைத் தொடர இலகுவாக இருக்கும்.

சரி இன்றைய பாடத்தைத் தொடருவோம்.

Practice the following Grammar Patterns Daily

1. I have work.
2. I have got work.
எனக்கு இருக்கிறது வேலை.

3. I don't have work.
4. I haven't got work.
எனக்கு இல்லை வேலை.

5. I had work.
எனக்கு இருந்தது வேலை.

6. I didn't have work.
எனக்கு இருக்கவில்லை வேலை.

7. I may have work.
8. I might have work.
9. I may be having work.
எனக்கு இருக்கலாம் வேலை.

10. I must have work.
எனக்கு இருக்க வேண்டும் வேலை.

11. I should have work.
எனக்கு இருக்கவே வேண்டும் வேலை.

12. I ought to have work.
எனக்கு எப்படியும் இருக்கவே வேண்டும் வேலை.

13. I must be having work.
எனக்கு நிச்சயம் இருக்கவேண்டும் வேலை.

14. I could have had work.
எனக்கு இருக்க இருந்தது வேலை.

15. I should have had work.
எனக்கு இருக்கவே இருந்தது வேலை.

16. I may have had work.
எனக்கு இருந்திருக்கலாம் வேலை.

17. I must have had work.
எனக்கு நிச்சயமாக இருந்திருக்க வேண்டும் வேலை.

18. I would have had work.
எனக்கு இருந்திருக்கும் வேலை.

19. I shouldn't have had work.
எனக்கு அநாவசியம் இருந்தது வேலை.

20. I needn't have had work.
எனக்கு அநாவசியம் இருந்தது வேலை.

21. I will have work.
எனக்கு இருக்கும் வேலை.

22. I won't have work.
எனக்கு இருக்காது வேலை.

23. I wish I had work.
எவ்வளவு நல்லது எனக்கு இருந்தால் வேலை.

இன்று நாம் கற்ற இந்த "கிரமர் பெட்டர்னை" போன்று கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளையும் 23 விதமாக மாற்றி எழுதி, வாசித்து பயிற்சி செய்யுங்கள்.

1. I have an interview
எனக்கு இருக்கிறது ஒரு நேர்முகத்தேர்வு.
2. I have money
எனக்கு இருக்கிறது பணம்.

அடுத்த மாதம் சந்திப்போம்-

# கணினி மயம் 6

-தேடுதலுக்கான விடை

1992 – ஸீ கேட் நிறுவனம் அதிர்வுகளைத் தாங்கக் கூடிய முதல் 2.5 அங்குல டிஸ்க் டிரைவினைத் தயாரித்து வழங்கியது.

1993 – முதல் 7200 ஆர்.பி.எம். வேக ஹார்ட் டிஸ்க் டிரைவினை (Barracuda ST12550) ஸீ கேட் தயாரித்து வழங்கியது. இதில் 3.5 அங்குல அளவிலான பிளாட்டர்கள் பத்து அமைந்திருந்தன.

1996 – மிக அதிக அளவிலான ஸ்டோரேஜ் டென்சிட்டி கொண்ட மீடியத்தினை ஐ.பி.எம். தந்தது. ஒரு சதுர அங்குல இடத்தில் நூறு கோடி பிட் டேட்டாவினை இதில் அமைக்க முடியும்.

1997 – ஸீகேட் முதல் 10,000 ஆர்.பி.எம். வேக ஹார்ட் டிஸ்க் டிரைவினை வழங்கியது. முதலில் 3.5 அங்குல பிளாட்டர்களுடனும் பின் 3 அங்குல பிளாட்டர்களுடனும் அமைந் திருந்தது.

1999 – மைக்ரோ டிரைவ் என அழைக்கப்படும் மிகச் சிறிய ஹார்ட் டிஸ்க்கினை ஐ.பி.எம். வழங்கியது. இதில் ஒரு அங்குல பிளாட்டர்கள் இருந்தன. ஒரு பிளாட்டரில் 340 எம்.பி. டேட்டா பதிய முடிந்தது.

2000 – அதிவேக இயக்கத்துடன், 15000 ஆர்.பி.எம்., ஹார்ட் டிஸ்க் டிரைவினை ஸீ கேட் தயாரித்து வழங்கியது.

2002 – பெர்பென்டிகுலர் மேக்னடிக் ரெகார்டிங் டெக்னாலஜி அடிப்படையில் ஹார்ட் டிஸ்க் இயங்க முடியும் என ஸீ கேட் காட்டியது. இதன் மூலம் ஒரு சதுர அங்குல சிப்பில் 100 கிகா பிட்ஸ் தகவல்களைப் பதிய முடியும்.

2005 – ஹிடாச்சி முதல் 500 ஜிபி ஹார்ட் டிஸ்க்கினை வெளியிட்டது.

2006 – நோட்புக் கம்ப்யூட்டர்களில் பயன்படக் கூடிய Momentus 5400.3 என்னும் 2.5 அங்குல முதல் ஹார்ட் டிரைவினை ஸீ கேட் தந்தது. இதன் கொள்ளளவு திறன் 160 ஜிபி.


Barracuda 7200.10 7200.10 என்ற பெயரில் 750 ஜிபி திறன் கொண்ட ஹார்ட் டிரைவினை ஸீ கேட் வெளியிட்டது.

2007 – முதல் 1 டெரா பைட் ஹார்ட் டிஸ்க்கினை ஹிடாச்சி நிறுவனம் டெஸ்க் ஸ்டார் 7கே 1000 என்ற பெயரில் வெளியிட்டது. இதில் 3.5 அங்குல அளவிலான பிளாட்டர்கள் ஐந்து இருந்தன. ஒவ்வொரு பிளாட்டரும் பி.எம்.ஆர். தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி 200 ஜிபி டேட்டாவினைப் பதிந்தன.

2008 – லேப் டாப் கம்ப்யூட்டரில் பயன்படுத்த ஹிடாச்சி, 2. 5 அங்குல அளவிலான ஹார்ட் டிரைவினைத் தந்தது. இதில் இரண்டு பிளாட்டர்கள் 5,400 ஆர்.பி.எம்.வேகத்தில் சுழன்றன.

2009 – வெஸ்டர்ன் டிஜிட்டல் முதல் 2 டெரா பைட் ஹார்ட் டிஸ்க்கினைக் கொண்டு வந்தது. நான்கு 3.5 அங்குல பிளாட்டர்கள் இதில் உள்ளன. ஒரு பிளாட்டரில் 500 ஜிபி டேட்டா பதியமுடியும்.

வெஸ்டர்ன் டிஜிட்டல் மேலும் ஒரு சாதனையை மேற்கொண்டது. முதல் 1 டெரா பைட் ஹார்ட் டிஸ்க்கினை 2.5 அங்குல அகலத்தில் தயாரித்தது. லேப்டாப்பில் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தக்கூடிய இதன் பெயர் ஸ்கார்ப்பியோ புளூ.



## கணினியை ஒரே வினாடியில் ஷட்டவுன் செய்ய

பொதுவாக கணினியில் உள்ள ஷட்டவுன் வசதியை பயன்படுத்தி அணைக்கும் பொழுது "Saving your settings" "Windows is Shutting down" போன்ற செய்திகள் வரும். சில நிமிடங்களுக்கு பின்னர் தான் கணினி அணைக்கப்படும்.


இதெல்லாம் மைக்ரோசாப்ட் நிறுவனம் செய்யும் கண்கவர் வித்தைகள் தான் . கணினியை அணைக்க சில வினாடியே போதுமானது . இந்த கண்கவர் வித்தைகளை பார்க்க விரும்பாதவர்கள் கீழ்க்கண்ட முறையை பயன்படுத்தி ஒரு சில வினாடியில் கணினியை அணைக்கலாம் . எந்த சேதமும் ஏற்படாது.

உங்கள் கணினியின் Task Manager ரை திறந்து கொள்ளுங்கள். ( Ctrl + Alt + Delete விசைகளை சேர்த்து அழுத்தினால் Task Manager திரைக்கு வரும் )

இந்த Task Manager ல் உள்ள மெனுவில் Shut Down ல் உள்ள Turn Off என்பதை Ctrl கீயை அழுத்திக்கொண்டே கிளிக் செய்யுங்கள்

வினாடியில் கணினி அணைந்து விடும்.

# 2020 -ல் சூரியனுக்கு ஆதித்யா செயற்கை கோள்: இஸ்ரோ திட்டம்



வரும் 2020-ம் ஆண்டில் சூரியனுக்கு செயற்கைகோள் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது என இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்னன் தெரிவித்துள்ளார். சென்னையில் தனியார் பல்கலைகழகத்தில் மாணவர்களிடையே நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் பேசியதாவது: வரும் 2017முதல் 2020-ம் ஆண்டிற்குள்ஆதித்யா என்ற பெயரில் சூரியனுக்கு செயற்கை கோள் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. முன்னதாகஇரண்டாம் கட்டமாக சந்திராயன்-2 செயற்கை கோள தயாரிக்கப்பட்டு அவை நிலவில் தரையிறங்க வைக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஜி.எஸ்.எல்.வியின் திறனை மேம்படுத்தும்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2014 முதல் 2017-ம் ஆண்டிற்குள் நான்கு டன் அளவு அதிகரிக்கப்பட உள்ளது.தொடர்ந்து 2020-ம் ஆண்டிற்குள் மேலும் ஆறு முதல் 10 டன் அளவு திறனை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிழய பேரிடர் தடுப்பது குறித்து கையாள்வதற்காக அனுப்பப்பட்ட கல்பனா, இன்சாட் 3-டி செயற்கை கோள் மிகவும் உதவிக்கரமாக செயல்பட்டு வருகிறது. அவை அனுப்பிய 400க்கும் மேற்பட்ட புகைபடங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என கூறினார். இந்திய பகுதிகள் குறித்து ஆராய்வதற்காகஅனுப்பபட்ட உள்ள ஐ.ஆர். என்.எஸ்.எஸ்1-பி வகை செயற்கை கோள்கள் அமெரிக்காவின் குளோபல் பொசிசன் முறைக்கு நிகரானதாக அமையும் என தெரிவித்தார். மேலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட மங்கல்யான் செயற்கை கோள் திட்டமிட்டபடி சரியானபாதையி செல்வதாகவும் , அதன் மொத்த பயண தூரமான 680 மில்லியன் கி.மீ தூரத்தில் தற்போது மூன்றில் ஒருபங்கு தூரத்தை கடந்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

# பிறரைப் பற்றி பேச முன் ஒரு சம்பவம்

பக்தாதில் இருந்த ஒரு மார்க்க அறிஞரிடம், ஒருவர் அவரது நண்பரை பற்றி ஏதோ கூற வந்தார். உடனே அவரது பேச்சை நிறுத்திய மார்க்க அறிஞர் நீர் இன்னொருவரை பற்றி கூற முன் பின்வரும் மூன்று கேள்விகளுக்கு பதிலளிக்கமாறு கூறினார்.

முதல் கேள்வியாக "நீங்கள் கூற இருக்கும் விடயம் 100 வீதம் உண்மையானதா?" எனக் கேட்டார். அதற்கு "இல்லை" என பதிலளித்த அவர், அவ்விடயத்தை இன்னொருவரிடம் இருந்து தான் கேட்டதாக கூறினார். அப்படியெனில் நீங்கள் கூற இருக்கும் விடயம் உண்மையா? பொய்யா? எனத் தெரியாது, எனவே இரண்டாம் கேள்விக்கு பதிலளியும் என்றார் மார்க்க அறிஞர்.

"நீங்கள் கூறப் போகும் விடயம் அவரை பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த கூடியதா"? "இல்லை" என்றார் வந்தவர். அவ்வாறாயின் நீர் இன்னொருவரை பற்றிய தவறான விடயத்தை அது உண்மையென உறுதி செய்யாத நிலையில் கூற வந்திருக்கிறீர். இருந்தும் மூன்றாவது கேள்வியை நீர் எதிர் நோக்கலாம் என்றார் அந்த மார்க்க அறிஞர்.

"நீங்கள் சொல்லும் விடயத்தால் எனக்கு ஏதாவது நன்மை கிடைக்குமா?" திரும்பவும் "இல்லை" என்றார் வந்தவர். எனவே உண்மையென உறுதி செய்யாத,எனக்கு ஏதும் நன்மையற்ற, என் நண்பரை பற்றிய தவறான விடயத்தை கூறுவதில் எந்த பிரயோசனமும் இல்லை, ஆகவே அவ்விடயத்தை கூற வேண்டாம் என அம்மார்க்க அறிஞர் பதிலளித்தார்.

ஆவி 1 :- விஷம் குடிச்சி சாக போனேன்..
விஷத்துல கலப்படம்.. பிழைச்சிகிட்டேன்
ஆவி 2 :- அப்புறம் எப்பிடி செத்த ?

ஆவி 1 :- காப்பாத்த மருந்து கொடுத்தாங்க...
மருந்துல கலப்படம் செத்துட்டேன்

# கவிதை மழை

## கொஞ்சம் நிம்மதி

வெஞ்சமர் சுமந்த செந்தமிழ் மண்ணின்
கடந்து சென்றிட்ட ஆண்டுகள் ஐந்தில்
நெஞ்சமகலா நினைவலைகள்

விடிந்தும் என்ன நடக்குமோ என்று
நித்திரை இல்லாத எத்தனை இரவுகள்
மின்னல் வேகத்தில் யன்னலோரம்
வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகள்
பீறிட்டுவரும் பீரங்கிச் சத்தத்தால்
செவிப்பறை கிழியும்
நடுச்சாமத்தில் நாய்கள் குரைக்கும்
அரவங்கள் கேட்கும் “கவுத அத்துல”
புரியாத பாஷையால் புருவங்கள் நெளியும்
ஊரெங்கும் நிசப்தம் உயிரொடுங்கிப்போகும்
உயரப்பறக்கும் உலங்குவானூர்தி
உமிழ்ந்து கக்கும் தீப் பொறிகள்
பதுங்கு குழிக்குள் ஒழித்திருந்து
நேராத கடவுளுக்கெல்லாம் நேர்த்திவைத்து
செத்துப்பிளைத்த நாட்கள் ஒன்றல்லப் பல

இன்னுமெத்தனை துன்பங்கள் துயரங்கள்
முள்ளிவாய்க்கால் சொல்லும் கதைகள்
நினைத்துப் பார்க்கையில் நிறைவுண்டு
கொடியபோர் முடிந்ததால் இப்போ
கொஞ்சம் நிம்மதி

கவிஞர் – துரை
ஓமந்தை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும்
நனைந்திடலாம் வழமையான
உங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

## அன்றும் இன்றும்...

அன்று எனக்கும் உனக்கும் இடையில்
புகுந்துவிட காற்றுக்கூடப்
பயப்பிட்டது
ஆனால் இன்றோ
எனக்கும் உனக்கும்
இடையில் சூறாவளியும்
சுனாமியும் அல்லவா
சுழன்று
விளையாடுகிறது

பிரியநிலா
ஓமந்தை

## நிலாவுடன் ஒரு நாள்

முற்றத்து நிலவுடன் முகம் நிமிர்த்தி
மூன்று மணிநேரம் முதுமை கடத்திவிட்டேன்
கால ஓட்டத்தின் வேக ஓட்டம் அறியாமலே...
வெட்கித் தவிக்கிறது நாணத்தால் நிலவு
மூன்றரை மணிநேரம் அழிந்துவிடவே
ஓர் வழிப்போக்கனாய் நானும்...
அத்தனை நிமிடங்கள் அசைபோட்ட இயற்கை
அன்றைனக்குப் புதியவை தான்
புலன்களுக்கும் புதுமை தான்

நிலவொளியின் கருவினிலே
பிரசவித்த குழந்தைகளாய்
விண்மீன்களும் என்னவோ
எனைப் பார்த்து சிரித்து விட்டன


இத்தனை கருமையான இரவினிலே
அசைந்து போன நிலவைப் பற்றி
சொல்ல...

இலக்கண இலக்கியத்துடன்
தோற்றுப்போய்விட்டன
அத்தனை உவமைகளும்
அரை நொடியில்...

பிரியதர்ஷினி பிரகாசம்
பாரதிபுரம், வவுனியா

# விளையாட்டுச் சங்கதி

## கொலிவூட்டுக்கு வருகிறார் ஸ்ரீசாந்



கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் கோலிவுட் படத்துக்கு இசை அமைக்கிறார். டி–20 கிரிக்கெட் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டார் ஸ்ரீசாந்த். பிறகு கிரிக்கெட் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து அவர் திரையுலகில் நுழைய முடிவு செய்தார். மலையாள படமொன்றில் நடிக்க பேச்சு நடந்தது. இந்நிலையில் கோலிவுட்டில் புதிய படமொன்றுக்கு இசை அமைக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். தமிழ் தெலுங்கில் உருவாகும் இப்படத்துக்கு 'அன்புள்ள அழகே' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஸ்ரீசாந்த் சகோதரர் மது பாலகிருஷ்ணன் பாடல் பாடுகிறார். இதற்கிடையில் மும்பையில் நடக்கும் நடன போட்டி ஒன்றிலும் ஸ்ரீசாந்த் பங்கேற்கிறார். இதற்காக அவர் நடன பயிற்சி தொடங்கிவிட்டார். இதுபற்றி அவரது மனேஜரும், சகோதரருமான திப்புசாந்த் கூறும்போது, ஸ்ரீசாந்த் தற்போது மும்பையில் இருக்கிறார். நடன போட்டியில் பங்கேற்பதற்காக பயிற்சி பெற்று வருகிறார் என்றார். இந்நிகழ்ச்சிக்கு மாதுரி தீட்சித் உள்ளிட்ட 3 பேர் நடுவராக உள்ளனர். ஏற்கனவே ஷாருக்கான் நடத்திய ஒரு மேடை நிகழ்ச்சியில் ஸ்ரீசாந்த் பங்கேற்று நடனம் ஆடி இருக்கிறார்.

## திக் திக் திக் போட்டி!

### வரலாற்று சாதனை படைத்த மும்மை

ஐ.பி.எல் கடைசி லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை, மும்பை மிகக் குறைவான ஓவர்களில் வீழ்த்தி வரலாற்று சாதனை படைத்துள்ளது.
தொடர் தோல்விகளால் துவண்டு வந்த மும்பை அணி, துடுப்பாட்டத்தையும், பந்து வீச்சையும் சரிசெய்து வெற்றிப்படியை நோக்கி பயணம் செய்தது.



இந்நிலையில் ராஜஸ்தான் அணிக்கெதிரான கடைசி லீக் ஆட்டத்தில் 'பிளே–ஆப்' சுற்றுக்கு செல்ல ராஜஸ்தான் அணிக்கு தான் அதிக வாய்ப்பிருந்தது. ஆனால் அந்த விதியையும் மாற்றி எழுதியது மும்பை.

ராஜஸ்தான் றொயல்ஸ் அணியுடனான வாழ்வா சாவா போட்டியில் கடைசிப் பந்தில் வெற்றியைப் பெற்றதோடு, 'பிளே ஆப்' சுற்றுக்குள்ளும் நுழைந்து உற்சாகத்தில் துள்ளிக் குதித்தது மும்பை இந்தியன்ஸ்.

ஐபிஎல் வரலாற்றில் மட்டுமல்லாமல் டி20 கிரிக்கெட் வரலாற்றிலும் இந்த போட்டி புதிய வரலாற்றை எழுதி விட்டது.

மும்பை அணி தனக்கு நிர்ணயிக்கப்பட்ட 190 ஓட்டங்களை 14.3 ஓவர்களில் எடுத்தாக வேண்டும் என்ற நிலையில் களம் இறங்கியது. ஒரு பந்து தவறினாலும் கூட மும்பை வெளியேறிவிடும்.

14.3 ஓவரின்போது இரு அணிகளின் ஓட்டங்களும் சமமாகி விட்டன. இதனால் மும்பை 'பிளே–ஆப்' பிரிவுக்குத் தகுதி பெறுமா என்பதில் குழப்பம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அடுத்த பந்தில் பவுண்டரி அடித்தால் மும்பை அணி தகுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும் என்று நடுவர்கள் அறிவித்தனர். கடைசி நேரத்திலே சிக்சர் அடித்து 'பிளே–ஆப்' சுற்றை உறுதி செய்தார்.

இதுவரை எந்த ஒரு டி 20 போட்டியிலும் 14.4 ஓவர்களில் 195 ஓட்டங்கள் எடுக்கப்பட்டதில்லை. அந்த வகையில் இது ஒரு புதிய சாதனையாக பதிவாகி விட்டது.

# සිංහල උගනිමු சிங்களம் கற்போம் 11

அன்பார்ந்த வாசகர்களே!
දයාබර පාඨකයිනි,

උපකාරක පද
இடைச்சொற்கள்

විතර அளவில் / மட்டில்
මම පහට විතර ආවා
நான் ஐந்து மணி அளவில் வந்தேன்

ඒ සාරිය රුපියල් තුන්දාහක් විතර වෙනවා
அந்த சாரியின் விலை மூவாயிரம் ரூபாய் மட்டில் வரும்

විතරයි மட்டும்
මේ පේළිය කාන්තාවන්ට විතරයි
இந்த வரிசை பெண்களுக்கு மட்டும்

මෙහෙ එළවළු කෑම විතරයි
இங்கு சைவ உணவு (மரக்கறி உணவு) மட்டும் (பெறலாம்)

ඇති இருக்கும் / இருக்கின்றது
ලාච්චුවේ සල්ලි ඇති
லாச்சியில் காசு இருக்கும் / இருக்கின்றது

දැන් වෙලාව පහට විතර ඇති
இப்பொழுது நேரம் ஐந்து மணி அளவில் இருக்கும்

ඇති போதும்
මට බිස්කට් දෙකක් ඇති
எனக்கு இரண்டு பிஸ்கட்டுகள் போதும்

මට රුපියල් සීයක් ඇති
எனக்கு நூறு ரூபாய் போதும்

නම් / නං என்டால் / இருந்தால்
එනවා නම් / නං එන්න
வருவதாக இருந்தால் வாருங்கள்

ගාන අඩු නම් / නං ගන්න
விலை குறைவு என்றால் வாங்குங்கள்

තමයි என்றால் / தான்
ඔයා තමයි කිව්වේ
நீங்கள் தான் சொன்னீர்கள்

අපිට සීනි තමයි නරක
எங்களுக்கு சீனி தான் கூடாது

ඉඳලා இருந்து / தொடக்கம்
අද ඉඳලා කැන්ටිම ඇරලා
இன்று தொடக்கம் சிற்றுண்டிச்சாலை திறந்து இருக்கும்

වවුනියාවේ ඉඳලා යාපනේට කිලෝමීටර් එකසිය හතළිස් පහයි
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நூற்று நாற்பத்து ஐந்து கிலோ மீற்றர்கள் உள்ளது

මතු සම්බන්ධයි
தொடரும்

**பி.வி.செல்வராஜ்**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වි.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

## நடைபாதை துணுக்கு

வெயிலில் களைத்துப்போய் நடந்து வந்து கொண்டிருக்கும் நடுத்தர வயதுடைய ஒருவர் அதே திசையில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் யுவதி ஒருவரை மறித்துக்கேட்கிறார்.

"பிள்ளை நல்லாய்க் களைச்சுப்போனேன் அந்தச் சந்திவரைக்கும் ஏற்றிக்கொண்டு போய் விட்டு விடும்"

**யுவதி:** இல்லை இல்லை எனக்கு நேரம் போகுது

**நபர்:** உம்முடைய தகப்பன் போல நினைத்து ஏற்றிக்கொண்டு போய் விட்டு விடுமன்


**யுவதி:** முடியாது முடியாது

**நபர்:** உம்முடைய சகோதரனைப்போல எண்ணி கொண்டு போய் விட்டு விடும்

**யுவதி:** முடியாதென்றால் முடியாது

**நபர்:** பிளீஸ், உம்முடைய அத்தான் என்று நினைத்து ஏற்றிக்கொண்டு போமன்

**யுவதி:** ஏறுங்கோ போவம், இதை முதலே சொல்லியிக்கலாம் தானே



கவிஞர் துரை - ஓமந்தை

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வினாத்தொகுப்பு


மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்

**ஆசிரியர்: என்.எஸ்.தீபன்** B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்






**01ஆம் 02ஆம் வினாக்களில் தரப்பட்ட பொருட்கூட்டங்களின் பொருத்தமற்ற தொகுதியினைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.**

01

1. 
2. 
3. 


02.

1. 
2. 
3. 

03. 2010ம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின் இம் மாதத்தில் உள்ள வியாழன், வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை முறையே

1. 5,5ஆகும் 2. 5.4 ஆகும் 3. 4,5 ஆகும் 4. 4,4 ஆகும்




04.




என்றவாறு மின் குமிழ்கள் ஒழுங்குமுறைப்படி பொருத்தப்பட்டுள்ளன. இதில் 40 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

1. ஊதா 2. பச்சை 3. மஞ்சள் 4. சிவப்பு


05. உணவு, பழங்கள் , சோறு , அன்னாசி என்பவற்றைக் காட்டுவதற்கு மூன்று மாணவர்கள் வரைந்த உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான உரு எது?

1. 
2. 
3. 

# செவ்வாய்க்கிரகத்திற்கு தெரிவான இரு கேளரப்பெண்கள்

விண்வெளியில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும் மனிதன் உயிர் வாழ ஏற்ற சூழல் பூமியில் மட்டுமே உள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மற்ற கிரகங்களில் மனிதன் குடியேறும் சூழல் உள்ளதா? என்பது பற்றிய ஆராய்ச்சி உலகம் முழுக்க தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த ஆய்வுகளின் மூலம் சிகப்பு நிற கிரகமான செவ்வாய் கிரகத்தில் மனிதன் எதிர்காலத்தில் குடியேறும்சூழலை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். விஞ்ஞானிகளின் இந்த அறிவிப்புக்கு பிறகு செவ்வாய் கிரகத்தில் குடியேற பலருக்கும் ஆசை ஏற்பட்டுள்ளது. இதை பயன்படுத்திக்கொண்டு செவ்வாய்கிரகத்தில் 'பிளாட்' போட பல வெளிநாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு களத்தில் குதித்து உள்ளனர்.



இந்த நிலையில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'ஒன்ஸ் இன் மென் லைப் டைம் ஆப்பர்சூனிட்டி' என்ற அமைப்பு செவ்வாய் கிரகத்தில் குடியேற ஆர்வம் உள்ளவர்களுக்கு இணைய தளம் மூலம் 'மார்ஸ் விண்' என்ற போட்டியை நடத்தியது. செவ்வாய்கிரகத்தில் குடியேறுவது ஆபத்தானதா? பாதுகாப்பு ஏற்பாடுகள் பலனளிக்குமா?, என்பதையெல்லாம் பற்றி கவலைப்படாமல் போட்டி போட்டுக்கொண்டு உலகம் முழுவதும் இருந்து ஏராளமானோர் இந்த போட்டியில் பங்கேற்றனர். இவர்களில் இருந்து 706 பேரை அந்த அமைப்பு தேர்வு செய்துள்ளது. தற்காலிக பட்டியல் என்று அறிவிக்கப்பட்டுள்ள இதில் 17 பெண்கள் உள்பட 44 இந்தியர்களும் இடம் பெற்று உள்ளனர்.


செவ்வாய் கிரகத்தில் குடியேறுவோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அதிர்ஷ்டசாலிகளில் 2 பேர் கேரளாவைச் சேர்ந்த பெண்கள் ஆவர். இவர்களில் ஒருவர் பெயர் திரதா. பாலக்காடை சேர்ந்த இவர் கோவையில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ் 2 முடித்து விட்டு மேல்படிப்பு படிக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

இன்னொருவர் லேகா, இவரது சொந்த ஊர் பாலக்காடு. பட்டப்படிப்பு படித்துள்ள இவரது கணவர் பெயர் விமல்குமார். இவர் அயர்லாந்து நாட்டில் ஐ.டி.கம்பெனியில் இவர் அதிகாரியாக உள்ளார்.

செவ்வாய்கிரகத்துக்கு பயணம் செய்யும் அதிர்ஷ்டசாலியாக தேர்வு பெற்றதால் இந்த 2 பெண்களும் இப்போதே வான்வெளியில் மிதப்பது போல மகிழ்ச்சியாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்கிரகத்துக்கு செல்லும் தற்காலிக பட்டியலில் உள்ள 706 பேருக்கும் 10 ஆண்டுகள் விசேஷ பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அதன்பிறகு அவர்களில் இருந்து 24 பேர் தேர்வு செய்யப்பட்டு செவ்வாய்கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். முதல் கட்டமாக 4 பேர் செவ்வாய்கிரகத்துக்கு செல்ல உள்ளனர்.

செவ்வாய் கிரகத்திற்கான முதல் பயணம் 2024 ல் தான் தொடங்க உள்ளது. இந்த பயணத்துக்கு 600 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



## வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் ஆக்கங்களை 25.06.2014 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

| | |
|---|---|
| பெயர் | : ................................ |
| முகவரி | : ................................ |
| தரம் | : ................................ |
| தொ.பே.இல | : ................................ |
| பாடசாலை | : ................................ |
| வ.ஆசிரியர் ஒப்பம் | : ................................ |

தெரிவு செய்யப்படும்
3 வர்ணத்திற்கு பாடசாலை
உபகரணப் பொருட்கள்
பரிசாக வழங்கப்படும்

வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள் போட்டிக்கு பிரதான அனுசரணையாளர்

கையடக்கத் தொலைபேசிகளின் ராஜன்

Ke.Pe.L
Video Vision & Mobile

இல:34. சந்தை சுற்றுவட்ட வீதி.
வவுனியா.
077 6362555, 077 0565384
077 7577080

# இம்மாத இராசிபலன்

**மேஷம்:** குருபகவான் ஜென்ம ராசிக்கு 4இல் சஞ்சரிப்பதனால் அனுகூலமற்ற அமைப்பு தேவையற்ற அலைச்சல்கள் உடல் நிலை சோர்வு குடும்பத்தில் அடிக்கடி வாக்குவாதம் உண்டாகும் நிம்மதி குறையும், சுபகாரியங்கள் நடைபெறும் பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருக்கும் வியாபாரத்தில் வரவேண்டிய வாய்ப்புக்கள் கிடைக்கும் வேலையாட்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு லாபம் குறையும். குருசாதம் இன்றி சஞ்சரிப்பதால் தெட்சனாமூர்த்தி வழிபாடு செய்யவும்

**ரிஷபம்:** குருபகவான் ஜென்மராசிக்கு 3இல் சஞ:சாரம் செய்வதினால் எதையும் சமாளிக்கு தன்மை உடையவர்கள் பணவரவுகள் தேவைக்கேற்ப இருக்கும் கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை குறையும் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். பேசும்போது பேச்சில் நிதானம் வேண்டும். கல்வி மந்த நிலை ஏற்படும் குருபகவானுக்கு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்யவும் ஊனமுற்ற ஏழைகளுக்கு உதவி செய்யவும்

**மிதுனம்:** குருபகவான் ஜென்மராசிக்கு 2இல் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் விலகும் மருத்துவ ஓய்வுகள் குறையும் பணவரவுகள் தாராளமாக இருக்கும் அனைத்து வழிகளிலும் வெற்றி கிட்டும் வெளியூர் தொடர்புடைய வாய்ப்புகள் கிட்டும் திறமைக்கேற்ப பாராட்டுகள் கிடைக்கும் சனிபகவானுக்கு பரிகாரம் செய்வது உத்தமம்

**கடகம்:** குருபகவான் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்வதினால் சாதகமான அமைப்பைபெறமுடியாது உடல் ஆரோக்கியம் பாதிக்கும் கணவன் மனைவிக்கிடையே பிரச்சினைகள் வரலாம். ஆடம்பரசெலவுகள் அதிகரிக்கும் பணிகளில் கவனம் செலுத்துவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும் எதையும் சமாளித்து நடப்பது நல்லது. உடன் பணிபுரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது வியாழன் தோறும் குருபகவானுக்கு கொண்டல் கடலை மாலை அணிவித்து வழிபாடு செய்வது நல்லது

**சிம்மம்:** குருபகவன் உங்கள் ஜென்மராசிக்கு 12ல் சஞ்சாரம் செய்வதினால் அவ்வளவு சாதகமான அமைப்பு இல்லை. பணவரவுகளில் நெருக்கடிகள் ஏற்படாமலும் திடீர் பணவரவுகள் இருக்கும் குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கும் வியாபாரத்தில் சுமாரான நிலை ஏற்படும் நிதானத்தை கடைப்பிடித்து கோபத்தை குறைப்பது நல்லது தெட்சனாமூர்த்திவழிபாடு செய்வது நல்லது.

**கன்னி:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 11இல் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்கின்றார் அற்புதமான அமைப்பாகும். பணவரவுக்கு பஞ:சம் இருக்காது சொந்தமாக வீடு வாகனம் போன்றவை யோகமும் சிலருக்கு உண்டு.வெளிநாட்டுவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சுபிட்சம் நிறைந்து இருக்கும் தொழில் போட்டிகள் குறையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உண்டு படிப்பில் முன்னேற்றம் உண்டு. விநாயகரை வழிபாடு செய்யவும்

**துலாம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 10இல் சஞ்சாரம் செய்வதனால் அவ்வளவு சாதகமான அமைப்பு என்று கூறமுடியாது பணவரவுகள் தேவைக்கேற்ப இருக்கும் ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும் கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும் தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாது இருப்பது நல்லது. வியாழன் தோறும் நெய் விளக்கு ஏற்றி வழிபாடு செய்யவும்

**விருச்சிகம்:** குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு, 9இல் சஞ்சாரம் செய்வதினால் அற்புதமான அமைப்பு ஆகும். சுபகாரியங்கள் கைகூடும் குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் இருக்கும். இருக்கும் உடல் ஆரோக்கியம் இருக்காது. புத்திர வழியில் கவலை தரும் பணவரவுகள் சரளமாகும் சொந்தமாக கார் பங்களா வாங்குவீர்கள் கடன் யாவும் தடையின்றி தீரும் சனிபகவானுக்கு பரிகாரம் செய்யவும் ஆஞ்சனேயரை வழிபாடு செய்யவும்

**தனுசு:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு அஷ்டம ஸ்தானமான 8இல் சஞ்சாரம் செய்கின்றார். உடல் ஆரோக்கியம் அடிக்கடி பாதிக்கும் கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. ஒவ்வொரு விசயத்திலும் சிந்தித்து செயற்படுவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சிகரமாக இருக்கும் வீண் பிரச்சினைகள் வந்து சேரும் உதவிகள் தடையின்றி கிடைக்கும். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும் குருவழிபாடு செய்யவும்.

**மகரம்:** குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு 7இல் சஞ்சாரம் செய்ய இருக்கின்றார். பணவரவுகளில் பஞ்சம் இருக்காது. கடன்கள் யாவும் குறையும் தடைபட்ட சுபகாரியம் கைகூடும் எதிர்பாராத வெற்றி கிட்டும் எதிர்பாராத இடமாற்றங்கள் உண்டு. பணவரவுகள் சிறப்பாக அமையும் நல்ல வரங்கள் தேடிவரும். வழக்குகளில் தீர்ப்பு சாதகமாக அமையும் சனிபவகவான் வழிபாடு செய்யவும்


**கும்பம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 6இல் சஞ்சாரம் செய்வதினால் பொருளாதாரநிலையில் சிறப்பாக இருக்கும். தேவையற்ற பிரச்சினைகள் வரும். பிறர் விசயத்தில் தலையிடாது இருப்பது நல்லது. பணவரவுகளில் நெருக்கடி உண்டாகலாம். வீண்வம்பு வழக்குகள் உண்டாகும் பயணங்களால் அலச்சல்கள் உண்டாகும் தெட்சணாமூர்த்தி வழிபாடு செய்வது நல்லது.

**மீனம்:** குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு 5இல் சஞ்சாரம் செய்வதால் இது அற்புதமான அமைப்பு பணவரவுகள் தாராளமாக இருக்கும். வீடு, கார் போன்றவை வாங்குவீர்கள் பொன்பொருள் வந்து சேரும் கணவன் மனைவியிடையே விட்டுகொடுத்து செல்வது நல்லது. பேச்சில் நிதானம் தேவை உத்தியோக உயர்வுகிட்டும் ராகு கேது பகவானுக்கு வழிபாடு செய்யவும்.


"வேதாகம கிரியா ஜோதி" **சிவஸ்ரீ இரவீந்திர உமா சுதக்குருக்கள்**
ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் தேவஸ்தானம், பூந்தோட்டம், வவுனியா. 077 2265778

# SIVA ELECTRONICS

All Kind of remote control,
Speaker available here.
LCD / LED TV DVD PLAYER
Repair and Service







Softlogic Service agent நிறுவனத்தின் வவுனியா மாவட்ட அங்கீகாரம் பெற்ற திருத்துனர்

024 2227469 / 024 4900260 email: sivaelect70@gmail.com
66 and 70, Busstand Complex, Vavuniya.

# மணமகன் மணமகள் தேவை



வெளிநாட்டு மணமகன், மணமகள், உள்ளூர் மணமகன், மணமகள், தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

## தர்சினி திருமண சேவை

இல: 04/B, குட்செட் வீதி, வவுனியா.
தொ.பே.இல: 077 8866806 / 0772940146

# எவகிறீன்
# றோஜா கார்டின்ஸ்

- றோஜா, செவ்வரத்தை, எக்சோரா, அந்தூரியம் ஒகிட் உள்ளிட்ட பலவகை பூமரங்கள்
- அக்ளோநிமா, சைப்பிரஸ், அருகேரியா, சைக்கஸ் உள்ளிட்ட பலவகை அலங்கார தாவரங்கள்
- றெட்பாம், பொக்ஸ்றெயில், கேன் பாம், குயின் பாம், பாண்பாம், றோயல் பாம், ரவலிங்பாம், பொட்டில் பாம் உள்ளிட்ட பாம் இனங்கள்
- மா,பலா, கிலோகொய்யா, தோடை, தேசி, பட்டபுறுட் உள்ளிட்ட பயன்தரு ஒட்டுத்தாவரங்கள்
- பிளாஸ்ரிக்சாடிகள், தொங்குசாடிகள், கட்டர்கள், கூட்டெரு பூமர உரவகைகள் மேலும் பலவித பூங்கனியியல் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



**வீட்டுக்கொரு நந்தவனம் நாட்டிற்கொரு நல்லதனம்**
**அலங்கார தாவரங்களின் அட்டகாச சங்கமம்**

**எவகிறின் றோஜா கார்டின்ஸ்**
கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக
கண்டி வீதி, வவுனியா.
தொ.பே: 077 7880328 (9.00 - 6.00)
077 6898111 (9.00 - 6.00)


Printed by Vijay Printing Centre, and Published by Print Land Publication, No:172B, Mill Road, Vavuniya. in June, 2014